விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-9053)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 13 திங்கட்கிழமை (27.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 39

## கணவன் இறந்த செய்தி கேட்டு மனைவியின் உயிர் உடன் பிரிந்தது

### மாவை கலட்டியில் சோகம்



(யாழ்ப்பாணம்)

நோயினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தனது கணவன் இறந்த செய்தியைக் கேட்டு அவரது மனைவியும் உயிரிழந்த சோகம் நேற்றைய தினம் மாவை கலட்டியில் இடம்பெற்றது.

தெல்லிப்பழை மாவை கலட்டியைச் சேர்ந்த மு.ஜயாத்துரை (வயது-74) என்பவரே நேற்று முன்தினம் சனிக் ▷23

## அரசியல் கைதிகளின் விடுதலையில் மதத் தலைவர்களும் ஈடுபட வேண்டும்

### தமிழ் அரசியல் கைதிகள் மதத் தலைவர்களிடம் கோரிக்கை

(மன்னார்)

நீண்ட காலமாக எவ்வித நடவடிக்கையும் இன்றி சிறைச்சாலையில் அரசியல் கைதிகளாக இருக்கும் எங்களை விடுவிப்பதிலோ அல்லது சட்டரீதியாக விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அரசியல்வாதிகளுக்கு அப்பால் மதத் தலைவர்களும் ஈடுபடும் பட்சத்தில் தங்களுக்கு விமோசனம் கிடைக்கும் என அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

நீண்ட காலமாக எவ்வித விசாரணையும் இன்றி அரசியல் கைதிகளாக அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து வரும் பதினொரு அரசியல் கைதிகளை மன்னார் பிரஜைகள் குழு பிரதிநிதிகள், மன்னார் பிரஜைகள் குழு தலைவர் அருட்பணி ஞானபிரகாசம் அடிகளார் தலைமையில் சட்டத்தரணி ஏ.டபிள்யூ. அர்ஜுன் சகிதம் கடந்த புதன்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று இவ் அரசியல் கைதிகளை பார்வையிட்டனர். ▷23

# வேகமாகப் பரவுகின்றது கொரோனா வைரஸ்


### அவதானத்துடன் இருக்குமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சீனாவில் பரவி வரும் புதிய கொரோனா வைரஸ் தொடர்பாக நாட்டில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு சுகாதார அமைச்சு இலங்கை மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தெற்காசியாவில் பல நாடுகளில் இந்த வைரஸ் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல், இருமல், தடிமன், சுவாசிப்பதில் சிரமம், இயற்கை கழிவு நீராக வெளியேறுதல், தலைவலி, தொண்டையில் வலி, உடம்பு வலி, மூக்கில் நீர் வடிதல் போன்றவை இந்த நோய்க்கான அறிகுறிகளாகும். (23ஆம் பக்கம் பார்க்க)




### தருமபுரத்தில்
## கோவிலில் இளைஞன் சடலமாக மீட்பு

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் உள்ள கோவில் ஒன்றில் இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியை சேர்ந்த துரைச்சந்திரன் பானுஜன் (வயது - 21) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். ▷23

### நாம் ஒரு நாளும்
## அரசின் பக்கம் செல்ல மாட்டோம் - மனோ கணேசன்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பிரச்சினையை விரைவில் தீர்த்துக் கொண்டு புதிய கூட்டணியாக தேர்தலுக்கு முகம்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு ▷23

## இந்திய குடியரசு தினம் யாழில் நேற்று அனுஷ்டிப்பு



▷05

### ஐ.தே.கட்சியின்
## மத்திய செயற்குழு இன்று கூடுகின்றது

(கொழும்பு)

தலைமைத்துவம் மற்றும் பிரதமர் வேட்பாளர் உள்ளிட்ட பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூடவுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க. தலைமையக ▷23

### தொடர் சிகிச்சை மேற்கொள்ளாததால்
## நாய்க்கடிக்கு இலக்கான குடும்பப் பெண் உயிரிழப்பு
### கோப்பாயில் துயரம்

(யாழ்ப்பாணம்)

விசர் நாய்க் கடிக்கு இலக்கான குடும்பப்பெண் தொடர் சிகிச்சை மேற்கொள்ளாமல் இருந்ததன் காரணமாக உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ▷23

### பிரதேச சபை உறுப்பினர் மீது
## வடமராட்சி கிழக்கில் வாள்வெட்டுத் தாக்குதல்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப்பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந் ▷23

### ஜெனிவாவை எதிர்கொள்வது தொடர்பில்
## தற்காலிக நிகழ்ச்சி நிரலில் இலங்கை பட்டியலிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அமர்வை எவ்வாறு எதிர்கொள்வது என்ற தற்காலிக நிகழ்ச்சி நிரலில் இலங்கை பட்டியலிடப்பட்டுள்ளது.

2020 பெப்ரவரி 24ஆம் திகதி முதல் 20 மார்ச் மாதம் வரை நடைபெறவிருக்கும் அமர்வின்போது, ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் ஆண்டு அறிக்கை மற்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் பொதுச் செயலாளரின் அறிக்கைகள் சமர்ப்பிக் ▷23

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும்



கடந்த (30.12.2019) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் சிவசூரியகுமாரன் சரஸ்வதி

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் நாளை 28.01.2020 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியள வில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் தங் கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தங்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.)

இலகடி வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.
077 234 7453
தகவல் : குடும்பத்தினர்

(C-9073)

# இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட பெண்

(யாழ்ப்பாணம்)

சமூகம் மற்றும் பெண்ணியச் செயற் பாட்டாளரும் எழுத்தாளருமாகிய லதா கந்தையா என்பவர் நேற்று முன்தினம் யாழ். தட்டாதெரு சந்திக்கும் கோம்பயன் மணல் மயானத்திற்கும் இடையில் வைத்து இனந் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

இவர் வழமை போன்று தன் பணி நிமித்தம் மோட்டார் சைக்கிளில் வெளியே சென்று விட்டு மதியம் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இனந்தெரியாத நபர்களால் வழி மறித்துத்தாக்கப்பட் டுள்ளார்.

கை மற்றும் முதுகுப்பகுதிகளில் பலமாகத் தாக்கப்பட்டதுடன் இவரது மோட்டார் சைக் கிளும் சேதமடைந்துள்ளது. (ம-3,9,104)


## தேவை

Vijayalanka Auto Parts கடைக்கு ஒரு பெண் காசாளர் (Cashier) தேவை.

தொடர்புகளுக்கு :

077 889 2384

(2102)


# துயர் பகிர்கின்றோம்

**Mr.Manikam Ananthakumar**

(Divisional Education Officer - Tellipalai)



(C-9074)

தெல்லிப்பழை கோட்டக் கல்வி அலுவலர் திரு.மா.ஆனந்தகுமார் அவர்கள் மறைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலை யும் அடைகின்றோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

யா/மகாஜனக்கல்லூரி - தெல்லிப்பழை.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.


# தருமபுரத்தில் கசிப்புடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டக் குற்றத் தடுப்பு பிரிவினருக் குக் கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி நேற்று கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கட்டைக்காடு பகுதியில்சட்ட விரோத மான முறையில் வைத்திருந்த 120 லீற்றர் கசிப்புடன் ஒரு சந்தேக நபர்கைது செய் யப்பட்டார். (ம-3,316)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்



## இளையதம்பி யோகராசா

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி யோகராசா 25.01.2020 அன்று கால மானார்.

அன்னார் இளையதம்பி - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நாகம்மா தம்பதி களின் மருமகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், தயாபரன் (மீசாலை), தங்கராணி (கெருடாவில்), யோகராணி (கனடா), யோகேஸ்வரன் (கனடா), தவயோகராணி (நெல்லியடி), பிறேம கலா (அல்லாரை), காலஞ்சென்ற பரமேஸ்வரன், தவயோகேஸ் வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயராஜனி, ராகவன், ஜெகதீஸ்வரன், சந்திரிகா, ரவிச்சந்திரன், பாலச்சந்திரன், வசிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதர்சன், நிவாசன், நிசாந்தன், ஜீவிதா, நிஷாகரன், அபினாத், சகானா, கீர்த்தனா, பிரஜித், தக்சா, சச்சுன், மதுசாயினி, லதுசாயினி, கம்ஷிகா, ஆர்னிகன், மிதுலா, வர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், மாதவனின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2020) செவ் வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு.

தகவல் - குடும்பத்தினர்
தயாபரன் (மகன்) - 077 404 2545,
பா.பிறேமகலா (மகள்) - 077 668 5051, அபி (பேரன் - கனடா)

(C-9070)


## கல்விக் களஞ்சியமாகத்திகழும்

# யாழ்ப்பாணம் வரலாற்று ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது

### இந்தியத் துணைத்தூதுவர் புகழாரம்

(குப்பிழான்)

**யாழ்ப்பாணம் என்பது வரலாற்று ரீதியாக மிகவும் முக்கியத் துவம் வாய்ந்தது. யாழ்ப்பாணம் பண்டைய மன்னர்களின் காலத்தில் தலைநகராகவும் ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் கல்விக் களஞ்சியமாகவும் திகழ்ந்தது, அத்தகைய புகழையும் சிறப்புக்களையும் தமிழர்களின் பாரம்பரியங்களையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு அரும்பொருட் காட்சியகம் அமைக்கப்பட வேண்டிய தேவை உணரப்பட்டு அது நிறைவேற்றப்பட்டுள்ளது என யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் புகழாரம் சூட்டினார்.**



சிவபூமி அறக்கட்டளையால் யாழ்.நாவற்குழியில் அமைக்கப்பட்ட சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட்காட்சியகத் திறப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இவ்விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெறுமனே புத்தகங்களைக் கற்பதன் மூலம் மாத்திரம் வரலாற்றை அறிந்து கொள்ள முடியாது. வரலாற்று எச்சங்கள் மற்றும் அரும் பொருட்களை நேரடியாகப் பார்வையிட்டு எங்கள் பண்பாடு, மரபுகளை அறிந்து கொள்வது அவசியமானது.

வரலாற்று எச்சங்கள் மற்றும் பதிவுகளைத் தேடித் தேடி அறிந்து கொள்வது வரலாற்று ஆய்வாளர் களுக்கும் வரலாற்று மாணவர்களுக்கும் கடினமான பணியாகும். ஆனால், இதனை இலகுபடுத் தும் வகையில் அனைத்துப் பொருட்களையும் ஓரிடத்தில் பார்ப்பதற்கு வழிவகை செய்யும் வகையில் சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட் காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

அரும்பொருட்கள் என்பது வெறுமனே பொருட்கள் மாத்திர மன்றி அவை ஒவ்வொன்றும் நமது பண்பாடு, கலாசாரம், அறிவு ஆகியவற்றைக் காலம் தாண்டியும் வெளிப்படுத்தி நிற்கும் காலச்சுவடுகள்.

வரலாற்றுப் பொக்கிஷங்கள் காலத்தால் அழிவடைந்து செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு. அவ்வாறானதொரு நிலை ஏற்படுவதைத் தவிர்த்து யாழ்ப்பாண அரும்பொக்கிஷங்களையும் யாழ்ப்பாண வரலாற்றையும் எதிர்காலத் தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் இத்தகையதொரு அரும்பொருட் காட்சியகத்தைப் பெரும் முனைப்புடன் உருவாக்கியிருக்கிறார் கலாநிதி ஆறு. திருமுருகன்.

சமயப்பணிகள், சமூகப் பணிகள் என ஆறுதிருமுருகனால் ஆற்றப்படும் சேவைகள் ஏராளம். அவற்றில் முக்கியமானதொரு பணியாக சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட்காட்சியகத்தை உருவாக்கியமைக்காக இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது பண்பாட்டு அடையாளங்களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குப் பாதுகாப்பாக கொண்டு சென்று சேர்க்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)

## யாழில் சைவ-பௌத்த ஒற்றுமை மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சைவ - பௌத்த ஒற்றுமைக்கான முதலாவது மாநாடு எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் மானிப்பாய் வீதியிலுள்ள பிள்ளையாரின் விருந்தினர் விடுதியில் ஆரம்பமாகவுள்ளது.

முதல் நாள் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கலந்து கொள்ளவுள்ளார். இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கண்டி அஸ்கிரிய பீடாதிபதி கலந்து கொள்ளவுள்ளார்.

சைவர்களின் வாழ்விடங்களில் சைவர்களின் ஒப்புதலின்றிப் புத்தசமயக் கோவில்களை அமைப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த மாநாடு உதவ வேண்டும்.

அத்துரலிய ரத்ன தேரர், விமலதேரர் ஆகியோரை எடுத்துக்காட்டாகக் கொண்டு ஏனைய புத்த பிக்குகள் பணிபுரிய வேண்டும் எனவும் சைவசமயத்தை இலங்கைத்தீவின் முதன்மைச் சமயமாக அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளும் நாள் இந்தத் தீவில் .புத்தர் கூறிய அன்பும் அமைதியும் அறமும் ஓங்கும் நாளாகும் எனவும் சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார். (இ-9)


## ஐரோப்பிய ஒன்றியக் குழு தமிழ்க்கூட்டமைப்பு சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினர் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது தேர்தல் கண்காணிப்பின் இறுதி அறிக்கையை குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடம் கையளித்தனர். அடுத்து இடம்பெறப்போகும் பொதுத்தேர்தலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பு அவசியத்தையும் இரா. சம்பந்தன் எடுத்துரைத்தார். (இ-7)



## ஐ.தே.க.தலைமை மாற வேண்டும்

### ரணிலுக்கு எதிராக பொன்சேகா போர்க்கொடி



(களனி)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை மாற வேண்டுமென்றே மக்கள் தற்போது எதிர்பார்க்கின்றனரென நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

களனியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரச்சினையே தலைமைத்துவ பதவியாகும். மேலும் கட்சியிலுள்ள பெரும்பான்மையினர் தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டுமென்ற கருத்தையே முன்வைத்து வருகின்றனர்.

அத்தகைய எண்ணத்தில் தான் நாமும் இருக்கின்றோம். அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தல், மக்களின் எதிர்பார்ப்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அவதானிக்கும்போது கட்டாயம் கட்சி தலைமையில் மாற்றம் அவசியம் என்பது உறுதியாகின்றது. மேலும் சஜித்துக்கு குறித்த தலைமைப் பதவியை வழங்குவது தொடர்பான யோசனையும் முன்வைக்கப்பட்டு இருக்கின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நியூசிலாந்து அணிக்கு எதிரான 2வது ரி-20 போட்டியையும் வென்று அசத்தியது இந்தியா

நியூஸிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு இருபது போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.


நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணியானது நியூஸிலாந்துடன் 5 இருபதுக்கு-20, மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை ஒக்லாந்தில் ஆரம்பமான இருபதுக்கு-20 தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

இந்நிலையில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) ஒக்லாந்தில் ஆரம்பான இரண்டாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து 133 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி 17.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்து 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.





துடுப்பாட்டத்தில் கே.எல். ராகுல் 57 ஓட்டங்களையும், ஸ்ரேயர்ஸ் ஐயர் 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இப் போட்டியின் ஆட்ட நாயகனாக கே.எல். ராகுல் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரில் இந்திய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் சுற்றுத்தொடர்; ஜோகோவிச், கிவிட்டாவோ காலிறுதிக்கு தகுதி

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜோகோவிச் மற்றும் கிவிட்டோவா ஆகியோர் கால்இறுதி சுற்றுக்கு தகுதிபெற்றனர்.

கிராண்ட் சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் 7-ம் நிலை வீராங்கனையும், கடந்த முறை இறுதி போட்டிக்கு தகுதி பெற்றவருமான பெட்ரா கிவிட்டோவா (செக்குடியரசு) நேற்று காலை நடந்த 4-வது சுற்று ஆட்டத்தில் கிரீஸ் நாட்டை சேர்ந்த மரியா சகாரியை எதிர்கொண்டார்.


இதில் கிவிட்டோவா 6-7 (4-7), 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வென்று கால் இறுதிக்கு தகுதி பெற்றார். அவர் கால் இறுதியில் முதல் நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டியுடன் (அவுஸ்திரேலியா) மோத வாய்ப்பு இருக்கிறது. அவர் 4-வது சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த அலீசனை சந்திக்கிறார்.

27-வது வரிசையில் இருக்கும் சீன வீராங்கனை வாங் 4-வது சுற்றில் தோல்வி அடைந்தார். தகுதி சுற்று வீராங்கனையான ஜாபேர் (துனிசியா) 7-6 (7-4), 6-1 என்ற நேர்செட் கணக்கில் வாங்கை தோற்கடித்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 4-வது சுற்று ஆட்டம் ஒன்றில் கனடாவை சேர்ந்த 32-வது வரிசையில் இருக்கும் ரோனிக், குரோசியாவை சேர்ந்த சிலிச்சை எதிர்கொண்டார்.

இதில் ரோனிக் 6-4, 6-3, 7-5 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்று கால் இறுதிக்கு முன்னேறினார். அவர் கால் இறுதியில் 2-ம் நிலை வீரரும், நடப்பு சாம்பியனுமான ஜோகோவிச் (செர்பியா) சந்திக்கிறார்.

ஜோகோவிச் 6-3, 6-4 என்ற நேர்செட் கணக்கில் 14-வது வரிசையில் உள்ள டியாகோவை (ஆர்ஜென்டினா) தோற்கடித்தார்.




பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு மரியநாயகம் பிரான்சிஸ்க்

(M.A in Journalism & Mass Communication)

இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலும், கொமன்வெல்த் நாடுகளினாலும் அங்கீகரிக்கப்பட்ட இந்தியா- கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் பிஎச்வுந்தரம் மீடியா சென்ரில் 25.01.2020 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் ஆங்கிலமொழி மூலமான ஊடகக்கற்கை மற்றும் வெகுசனத்தொடர்பாடல் கல்வியில் முதுமாணிப்பட்டம் பெற்ற **மரியநாயகம் பிரான்சிஸ்க்** அவர்களை இதயம் நிறைந்த மகிழ்வுடன் நாம் வாழ்த்துகின்றோம். ஆங்கிலத்தில் நல்ல புலமை வாய்ந்த இவர் ஏற்கனவே சமூக விஞ்ஞானத்தில் இளமாணிப்பட்டமும், மனித உரிமைகளில் டிப்ளோமா பட்டமும், ஆங்கிலத்தில் டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார்.இவர் ஓர் ஆசிரியராகவும், ஒரு சிறந்த எழுத்தாளராகவும் மொழி பெயர்ப்பாளராகவும், சமாதான நீதவானாகவும், சமூக வேசகராகவும் சேவைகள் புரிந்து வருகின்றார்.அத்துடன் எமது சொபியா படிப்பகத்தின் போசகரும் ஆவார்.அவர் கல்வியில் உயர்ந்து இன்னும் பட்டங்கள் பல பெற்று வாழ்வில் உயர்வடைய இறை ஆசிகள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
சொபியா படிப்பகம், வெளிச்சவீட்டுவீதி, பருத்தித்துறை

(c-9072)





இந்தியக் குடியரசு நாளின் 70 ஆவது ஆண்டு விழா யாழ்.இந்தியத் துணைத் தூதரக வளாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் துணைத்தூதர் எஸ்.பாலச்சந்திரன், தேசியக் கொடியேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து யாழ்.ரில்ஹோ விருந்தினர் விடுதியில் கலை நிகழ் வுகள் இடம்பெற்றன. இதில் விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள்,திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-ஐ.சிவசாந்தன், வர்ணன்)


# மரண அறிவித்தல்

## திருமதி.நடராசா இரத்தினபூபதி (சுந்தரவல்லி)



வேலாயுதபிள்ளை வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இரத்தினபூபதி (சுந்தரவல்லி) அவர்கள் 24.01.2020 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் அமரர் வேலாயுதம் பிள்ளை- சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் வீரகத்தி- சின்னாச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும்அமரர் நடராசா அவர்களின் அன்பு மனைவியும் சுசிலாதேவி, சுகுணேந்திரன் (SWISS), சுஜாத்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்மலிங்கம், ஈஸ்வரி (SWISS), சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரூபன், நிதர்சன் நிரோஜன், நிரஞ்சன் பிரணவன், சிரணவன், கிரிஜா, வித்தகன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் அக்ஷயா அவர்களின் அன்புப் பூட்டியும் சேனாதிராஜா, அமரர் இராசபூபதி, அமரர் குகமூர்த்தி, குகனேஸ்வரி அமரர் காசிநாதன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 27.01.2020 இன்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் இடம் பெற்று 10 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு
SWISS: + 41768302032- viber
076 771 1953

விலாசம்:
வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(1489)


# நீதிபதி மீதான பிடியாணை குறித்து சட்டமா அதிபர் விளக்க வேண்டும்

## அரசியலமைப்புச் சபை தீர்மானம்

(கொழும்பு)

நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை கைது செய்வதற்காக பிடியாணை ஒன்றை பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியமை தொடர்பில் விளக்கமளிப்பதற்காக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, சபாநாயகர் கரு ஜெயசூரியவின் முன்னிலையில் அழைக்கப்பட வேண்டும் என அரசியலமைப்புச் சபை தீர்மானித்தது.

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிடியவை கைது செய்வதற்கு நீதிமன்றில் பிடியாணை ஒன்றை பெற்றுக்கொள்ளுமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பில் தொலைபேசி உரையாடல்களில் ஈடுபட்டமை தொடர்பில் சட்டமா அதிபர் இந்த ஆலோசனையை வழங்கிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்.திருமதி.
## கிருஷ்ணன் நல்லம்மா



அன்பென்ற வார்த்தையை ஊட்டி
வளர்த்து – எம்மை
வாழ்வென்னும் அண்டத்தில் விட்டுச்
சென்றாயம்மா
பிரிவென்னும் பெரும் துயரால்
பரிதவிக்க விட்டாயே
31 நாட்களென்ன முப்பத்தொரு
யுகங்களே கடந்தாலும்
மறையாது உங்கள் நினைவுகள்

அன்பின் உருவாய் பாசத்தின்
சிகரமாய்–எம் வாழ்வில்
ஒளியாய் எமக்கெல்லாம்
சுமைதாங்கியாய் நின்று
எம் வளமான வாழ்விற்கு வழிகாட்டிய
எம் தெய்வமே

எம்மைவிட்டு பிரிந்த துயர்தனை சுமந்த
வண்ணம் இன்றைய தினம் உங்கள்
31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்.

தோற்றம் 19.06.1939
மறைவு 28.12.2019

ஸ்ரீ.வாகீஸ்வரி,
கோண்டாவில் வடக்கு.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(2000)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி.வாசுகி ராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக, தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வா.தியாகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே. தபேந்திரன் தம்பதியினர் கலந்து கொள்வர். (5)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று 27 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பத்மகாந்தன், சிறப்பு விருந்தினராக வரணி பொதுச் சுகாதார பரிசோதகர் இ.நிஜன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-114)

# குருவிக்காட்டைப் பாதுகாக்க திணைக்களங்கள் முன்வரவேண்டும்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சரசாலை வடக்கு ஊர் எல்லையில் காணப்படுகின்ற நீரேந்து பகுதியான குருவிக்காடு அழிவின் விளிம்பில் உள்ளது. இந்தக் குருவிக்காட்டைப் பாதுகாக்க உரிய திணைக்களங்கள் முன்வர வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ரஜீவன் சபையில் பிரேரணை ஒன்றை முன்வைத்தார். சாவகச்சேரி பிரதேச சபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இப் பிரேரணையை சமர்ப்பித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


அடர்ந்த கண்டல் தாவரங்கள் காணப்படுகின்ற குருவிக்காட்டில்இயற்கையின் கொடையை நம்பி ஏராளமான பறவை இனங்கள் மற்றும் ஊர்வனங்கள் வாழ்ந்து வருகின்றன. இயற்கைச் சமநிலையைப் பேணும் இடமாகவும் குறித்த பகுதி காணப்படுகிறது. அத்துடன் பருவமழைக் காலத்தில் அதிகளவான வெளிநாட்டுப் பறவைகள் இனப்பெருக்கத்திற்காக வந்து தங்கும் இடமாக குருவிக்காடு விளங்குகிறது. ஆனால் அண்மைக்காலமாக குறித்த குருவிக்காட்டு சூழலில் திண்மக் கழிவுகள் கொட்டப்படுவதுடன், வெளிநாட்டுப் பறவை இனங்கள் உள்ளிட்ட அரியவகை பறவை இனங்களும் வேட்டையாடப்பட்டு விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சாவகச்சேரி பிரதேசசபை இயற்கை வளங்களை சீரழிக்கும் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அத்துடன் வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட உரிய திணைக்களங்கள் ஊடாக குருவிக்காட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-30)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## வியாபாரத்தில் வெற்றி தரும் குறியீடு

ஆதிசங்கரர் அருளிய சௌந்தர்ய லஹரியில் வரும் 32 ஆவது ஸ்லோகத்திற்குரிய யந்திரத்தை வியாபார நிறுவனங்களில் வைத்திருந்தால் வியாபாரம் விருத்தியடையும் எனக் கூறப்பட்டுள்ளது. அந்த எந்திரம் கீழே தரப்பட்டுள்ளது. அந்த எந்திரத்தை உற்று நோக்கியபோது ஒரு பெரிய உண்மையை புரிந்துகொள்ள முடிந்தது. அந்த யந்திரம் இரு கைகள் இணைவது போன்ற தோற்றத்தில் அமைந்துள்ளது.




ஜோதிடத்தில் வியாபாரத்தைக் குறிக்கும் காரககிரகம் புதனாகும். அந்த புதன் அத்தம் நட்சத்திரத்தில் உச்சம் அடைகிறார். அத்தம் நட்சத்திரத்தின் குறியீடு கையாகும். கைகளைக் குறிக்கும் காரக கிரகம் புதனாகும். எனவே வியாபாரிகள் தங்களுடைய வியாபார நிறுவன வளாகங்களில் கைக்குறியீட்டை சித்திரமாகவோ அல்லது புகைப்படமாகவோ வைத்து தினமும் அதைப்பார்த்து வர வியாபாரத்தில் எளிதில் வெற்றியடையலாம்.

அதிகாலையில் கண் விழித்தவுடன் அவரவர் வலது கை உள்ளங்கையை பார்த்து வந்தால் அன்றைய தினம் நாம் ஈடுபடும் அனைத்து விவகாரங்களிலும் சாதகமான பலனை அடையலாம் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. உருவ வழிபாட்டில் தேவதைகள் கைகளால் அபய முத்திரை காட்டி நிற்கின்றன. பெரியோர்களும், குருநாதர்களும் கைகளால் ஆசீர்வதிக்கிறார்கள்.


இணைந்த கைகளை சின்னமாகக் கொண்ட கூட்டுறவு வங்கி வெகுகாலம் வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது. இணைந்த கைகளை சின்னமாக் கொண்ட கைபேசி நிறுவனமாக நோக்கியா வியாபாரத்தில் பெரிய அளவில் வெற்றியடைந்துள்ளது.

நம் நாட்டில் வழக்கப்பட்டி ஒருவரை சந்திக்கும்போது கைகூப்பி வணங்கி வருகிறோம்.



மேற்கத்திய நாட்டினர் ஒருவரை சந்திக்கும் போது கை குலுக்கி வரவேற்கிறார்கள்.

பரத நாட்டிய கலையில் கைகளால் முத்திரை காண்பிப்பது பெரிதும் பார்வையாளர்களை கவர்கிறது.



ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த மார்வாடிகள் தங்கள் வியாபார நிறுவனங்களில் அலங்காரமாக கை உருவச் சித்திரங்களை வரைந்து வைத்திருப்பதைக் காணலாம்.

அரசியல் தலைவர்களில் சிலர் மாறுபட்ட முறையில் கைகளால் சைகை காட்டி மக்களைக் கவர்ந்திருக்கிறார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.இரண்டு விரல்களை காட்டி மக்களை கவர்ந்தவர்.

கிராமத்துப்பெண்கள் தங்கள் வீட்டு வாசற்கதவில் கைகளை சந்தங்குழம்பில் முக்கி முத்திரை பதிக்கிறார்கள். குறிப்பாக திருவிழாக்காலங்களில் இவ்வாறு செய்கிறார்கள். ஒரு சிலர் உறவினர்களையோ அல்லது நண்பர் களையோ சந்திக்கும் போது கைகளால் கட்டித் தழுவிக்கொள்கிறார்கள்.

# இராசி பலன்

27.01.2020
தை 13, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.36மணிக்கு
திருதியை முழுவதும்
அவிட்டம் காலை 6.51 மணிக்கு
சுபநேரம் 6.51 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36 மணிவரை
அழகு வெறும் வசந்தகாலத்து மலரேயாகும்.
சுப முகூர்த்த தினம்

வளவன்

கிரகநிலை: ராகு; சுக்,சந்; சூரி புத; சனி.குரு கேது; செவ்
சந்திராஷ்டமம் மிருகசீரிடம்

**மேடம்:** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் கூடும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**இடபம்:** சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், கௌரவமான நாள்.

**மிதுனம்:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பகை விலகி பாசம் கூடும் நாள்.

**கடகம்:** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கடன் பாக்கிகள் திடீரென வசூலாகலாம்.

**துலாம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வளர்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்:** உறவினர் வருகையுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள் பூர்வீகச் சொத்துகளால் ஆதாயமுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு:** நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கிடைக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், தொழில் நலன் கருதி புதிய நபர்களை சேர்க்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாக நேரிடலாம், சுப செய்திகள் அதிகரிக்கலாம், சயனசுகக் குறைகளை நாள்.

# நந்திக்கடலில் தேங்கிக் கிடக்கும் கழிவுகளை அகற்ற உடன் நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகளுக்கு ஆலோசனை

(மாளிகாவத்தை)

நந்திக்கடல் உட்பட வன்னிப் பிரதேச களப்புக்களை அபிவிருத்தி செய்து நன்னீர் மீன்வளர்ப்பிற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்துவன் மூலம் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீவிர கவனம் செலுத்தி வருகின்றார்.

குறிப்பாக நந்திக்கடலில் தேங்கிக் கிடக்கும் கழிவுகளை அகற்றுவதற்கும் மணல் திட்டுக்களை அப்புறப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சரால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சிற்கு அழைக்கப்பட்ட வனவள ஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே அமைச்சர் டக்ளஸால் மேற்குறிப்பிட்ட குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

நீண்ட காலமாக பராமரிக்கப்படாமல் இருக்கின்ற நந்திக்கடல் பிரதேசத்தில் பெருந்தொகையான கழிவுப் பொருட்கள் தேங்கிக் கிடப்பதாகவும் சுனாமியின் போது கரையொதுங்கிய மணல் திட்டுக்களால் நந்திக்கடலின் ஆழம் குறைந்துள்ளமையாலும் நன்னீர் மீன்பிடி பாதிக்கப்பட்டிருப்பதாக குறித்த தொழிலை வாழ்வாதாரமாக நம்பியிருக்கின்ற பிரதேச மக்களால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.



இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்திய அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய நிலையிலேயே நந்திக்கடல் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான மதிப்பீடுகள் மற்றும் சட்டநடைமுறை தொடர்பான அனுமதிகளை உடனடியாகப் பெற்று அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சரால் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், கடந்த ஆட்சியின் போது வெளியிடப்பட்ட இயற்கை வளப் பாதுகாப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் சில, நந்திக்கடல் - சுண்டிக்குளம் - நாயாறு - விடத்தல்தீவு போன்ற பிரதேசங்களில் நன்னீர் மீன் வளர்ப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடையூறாக இருக்கின்றன.

தற்போது இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் 18 வீதமாக இருக்கின்ற நன்னீர் மீன்பிடியை 30 வீதமாக உயர்த்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான அமைச்சால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையிலும் நன்னீர் மீன் உற்பத்தியில் ஜனாதிபதி ஆர்வம் செலுத்தி வருகின்ற நிலையிலும் இயற்கை வளப் பாதுகாப்பு தொடர்பான குறித்த வர்த்தமானி அறிவித்தல்களால் உருவாக்கப்பட்ட இடையூறுகளை சுமுகமாக தீர்த்துக் கொள்வது தொடர்பாகவும் சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டு ஆலோசிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நிறைவேற்று அதிகாரமுறையை நீக்க ஜே.வி.பி.ஆதரவு வழங்கும் - நளிந்த



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான முழுமையான ஆதரவை மக்கள் விடுதலை முன்னணி வழங்குமென நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிமுறைமை தொடர்பாக நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான 20 ஆவது அரசியலமைப்பு திருத்த நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மேலும் கடந்த காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறைமையை நீக்குவதற்கு மக்கள் அதிகாரத்தை வழங்கியிருந்தனர்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் நிறைவேற்றுஅதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு நாடாளுமன்ற த்தில் வாக்களிக்காத சந்தர்ப்பத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் வாக்குகளால் அதனை ஒருபோதும் நிறை வேற்ற முடியாது.

மேலும் இவ்விடயத்தில் மக்களுக்கு உடன்பாடு இல்லை எனின் மக்கள் விடுதலை முன்னணியும் அதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதிர்ப்பு வெளியிடாது.

இதேவேளை நிறைவேற்று அதிகார முறைமையை நீக்குவதற்கு சில சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சியால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எமது கட்சி ஆதரவு வழங்கும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)


## வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 09.02.2020 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இடம்பெறவுள்ளது. அனைத்துப் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

புதிய நிர்வாகக் குழுவிற்கான நியமனப் பத்திரங்களை எமது சங்க இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

C-6069

26.01.2020

வைத்திய கலாநிதி அ.ஜெயகுமரன்,
செயலாளர்.



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்




## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 28 ¾<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்<br>தொ.இ: B/ 10409 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 14 ¾ செவ் 2 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/ 10417 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 5 ½<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBM பட்டதாரி, வங்கி<br>எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்<br>தொ.இ: B/ 10411 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BioTechnology(Masters), Micro Biologist, Australia<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, Australia PR<br>தொ.இ: G/ 10418 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 36 செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.Ed(II Year), HNDE, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/ 10413 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 29 ½ சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Sc IT, Software Developer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தனியார் தொழில்<br>தொ.இ: G/10420 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 39 ¾<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு PR<br>தொ.இ: B/ 10415 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 33 சூரி செவ் 4 ல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: B.Sc, M.Sc, ஆசிரியர்<br>தொ.இ: G/ 10426 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.









யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக தமிழர்களின் வரலாற்றை எடுத்தியம்பும் அரும்பொருட் காட்சியகம் நாவற்குழியில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன், ரவிசாந், கொடிகாமம் செய்தியாளர்)

# எதிர்வரும் மகாசிவராத்திரிக்கு முன்னர் கீரிமலை தீர்த்தக்கேணி சீரமைக்கப்படும்

## வடக்கு ஆளுநர் உறுதி

(குப்பிழான்)

மகாசிவராத்திரிக்கு எத்தனையோ ஆயிரம் அடியவர்கள் வருகை தரும் கீரிமலை புனித ஷேத்திரத்தில் பலரும் வழுக்கி விழுகிறார்கள்.

ஆகவே, இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ் எதிர்வரும் மகா சிவராத்திரிக்கு முன்னர் கீரிமலை புனித தீர்த்தக் கேணி சீரமைக்கப்படும் என உறுதியளித்தார்.

சிவபூமி அறக்கட்டளையால் யாழ்.நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட்காட்சியகத் திறப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்வரும் மகா சிவராத்திரிக்கு முன்னர் கீரிமலைப் பகுதியை நிச்சயமாக சீரமைத்துத் தருவேன்.

கீரிமலையில் எனக்கொரு பாசப் பிணைப்பிருக்கிறது. எனது இணைப்புச் செயலாளரும் இந்த மண்ணில் பாசம் கொண்டதொருவர். மிகவும் சிறுவயதாகவிருக்கும் போது கீரிமலைக் கேணியில் நீராடிய ஞாபகங்கள் தற்போதும் என் நினைவிலிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-10-18-114)

# ஜனாதிபதியையும் பிரதமரையும் பிரிக்க ஐக்கிய தேசியக் கட்சி தீவிர முயற்சி

## நாமல் பகிரங்க குற்றச்சாட்டு

(அநுராதபுரம்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் பிரிக்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாக இறங்கியுள்ளதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இந்த செயற்பாட்டில் அவர்களால் ஒருபோதும் வெற்றியடைய முடியாது என்று தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், "நாடாளுமன்றமொன்றில் பெரும்பான்மையான உறுப்பினர்களை பெற்றுக்கொள்ள பேரம் பேசுதலை நாம் மேற்கொண்டால், நிச்சயமாக பலமானதொரு அரசாங்கத்தை எம்மால் ஸ்தாபிக்க முடியாமல் போய்விடும்.

இறுதியில் வில்பத்துவை சுத்தம் செய்தவர்கள் செய்த அரசாங்கத்தைப் போன்று தான் அது காணப்படும்.

இதுதான் உண்மையாகும். எனவே, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து பலமானதொரு அரசாங்கத்தை நாம் ஸ்தாபிக்க வேண்டும்.

இதற்கான அதிகாரம் மக்களிடம் தான் உள்ளது. இதனை மேற்கொள்ள நாம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும்.

19ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக பலமானதொரு நாடாளுமன்றம் இருந்தால் மட்டுமே, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். இல்லையென்றால், பின்னோக்கித்தான் நாம் நகரவேண்டியேற்படும்.



தற்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நல்லவர் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மோசமானவர் என்றும் கூறுகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தின்போது மகிந்த நல்லவர் கோட்டா மோசமானவர் என்று கூறினார்கள். அமெரிக்க கடவுச்சீட்டை வைத்திருந்தமைக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாக விமர்சித்தார்.

இன்று இது தொடர்பாக எல்லாம் எவரும் கருத்து தெரிவிப்பதில்லை. எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடியாது என ஐக்கிய தேசியக் கட்சிக்கு நன்றாகத் தெரியும்.

இதனால்தான் இவ்வாறான கதைகளைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இருப்பாராயின், அந்த அரசாங்கத்தின் பிரதமராக மகிந்த ராஜபக்ஷவே இருக்க வேண்டும் என மக்கள் தீர்மானித்து விட்டார்கள்.

இதனை ஐக்கிய தேசியக் கட்சியினர் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்போது, கோட்டாபயவும் மகிந்தவும் ஒருவருக்கொருவர் கோபமாக உள்ளார்கள் என்று கூறி வாக்குகளை பெற்றுக்கொள்ளவே இவர்கள் முற்படுகிறார்கள்.

ஆனால், இவர்கள் இருவரையும் பிரிப்பது ஒன்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அவ்வளவு எளிதான விடயமல்ல. சஜித் பிரேமதாஸவின் தந்தையும் அந்தக் காலத்தில் இந்த செயற்பாட்டை மேற்கொண்டு தோல்வியடைந்தார். எனவே, சஜித் பிரேமதாஸவுக்கும் ஒருபோதும் இவர்களுக்குள் பிளவினை ஏற்படுத்த முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குற்றவாளி! அர்ஜூன் மகேந்திரனை நாட்டுக்கு கொண்டுவர முடியுமா?

## கோட்டாவிற்கு ஹிருணிகா சவால்

(கொழும்பு)

**ஜனாதிபதி மற்றும் பிரதமரால் மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் பிரதான குற்றவாளியாக சந்தேகிக்கப்படும் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு கொண்டு வர முடியுமா? என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர சவால் விடுத்தார்.**



அத்தோடு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நெருங்கிய நண்பர்கள். ஆகவே இரு தரப்பு திருடர்களும் ஒருபோதும் தண்டிக்கப்படமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தா.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஆட்சிக்கு வந்தவுடன் பிணை முறி மோசடி குற்றவாளிகளை ஒரு மாத காலத்திற்குள் தண்டிப்பதாக தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டவர்கள் இன்று பிணைமுறி மோசடி தொடர்பான தடயவியல் அறிக்கையை கண்டு அஞ்சுகின்றார்கள்.

அதாவது 2001ஆம் ஆண்டில் இருந்து முறிகள் விநியோகத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிணைமுறி கொடுக்கல்- வாங்கல் மோசடியாளர்கள் இரு தரப்பிலும் உள்ளார்கள். ஆகவே இரு தரப்பினரும் தண்டிக்கப்பட வேண்டும். அதில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மாத்திரம் விதிவிலக்கல்ல. தற்போது இரு தரப்பிலும் உள்ள திருடர்கள் அஞ்சுவதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் இன்றும் நெருங்கிய நண்பர்கள். அரசியல்வாதிகள் வெளியில் எதிரிகளாக செயற்படுவதாக காட்டிக்கொண்டு நெருங்கிய நண்பர்களாக சுகபோகமாக வாழ்கின்றார்கள்.

சாதாரண மக்கள் மாத்திரம் அரசியல் காரணிகளைக் கொண்டு பிளவுபட்டுள்ளார்கள். பிணைமுறி மாத்திரமல்ல எந்தவொரு மோசடியுடன் தொடர்புடையவர்களும் தண்டிக்கப்படமாட்டார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரிப்பு

# சீனாவிலுள்ள இலங்கையர்களை உடன் அழைத்துவர நடவடிக்கை

## அடுத்த 24 மணித்தியாலங்களில் முதலாவது குழு நாட்டை வந்தடையும்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவியுள்ள சீனாவின் வுஹான் (WUHAN) மற்றும் சிச்சுஆன் (Sichuan) மாகாணங்களிலுள்ள மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து இலங்கையர்களையும் உடனடியாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

இதற்காக ஜனாதிபதி அலுவலகம், வெளிவிவகார அமைச்சு, சுகாதார அமைச்சு, பீஜிங் நகரிலுள்ள இலங்கை தூதரகம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகியன இணைந்து விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வுஹான் மாகாணத்திற்கு உள்வருவது மற்றும் அங்கிருந்து வெளியேறுவதை சீன அதிகாரிகள் தற்போது தடை செய்துள்ளனர். தடை நீக்கப்பட்டதும் அங்குள்ள மாணவர்களை அழைத்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சிச்சுஆன் மாகாணத்தில் செங்டு நகரிலுள்ள சுமார் 150 மாணவர்களை அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானம் ஒன்றை பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் சர்வதேச உறவுகளுக்கான மேலதிகச் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

தெனின் நகரிலுள்ள மேலும் 30 மாணவர்கள் தொடர்பான தகவல்கள் தூதரகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்களும் விரைவாக அழைத்து வரப்படவுள்ளனர்.

சீனா எங்கும் பரந்திருக்கும் அனைத்து மாணவர்கள் மற்றும் இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்தார்.

தூதரக அதிகாரிகளுக்கும் இலங்கையர்களுக்குமிடையே We chat தொடர்பாடல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சீனாவிலிருந்து இலங்கைக்கு வரும் அனைவரும் விமான நிலையத்தில் நோய்த்தொற்று தடுப்புக்கு உட்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

எவரேனும் காய்ச்சல் நிலைமைக்குள்ளாகி இருப்பதாக கண்டறியப்பட்டால் அவர்கள் ஐடிஎச் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவர். அத்தகையவர்களது இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகள் பொரளையில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

தற்போதைய நிலைமை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அனைத்து சுகாதாரத் துறைசார் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளார். நோய் கண்காணிப்பு வசதிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திடம் உள்ளன.

வைத்திய உபகரணங்கள் அல்லது இரசாயனப் பொருட்களை கொண்டு வருவதற்கான தேவை ஏற்பட்டால் விமானத்தின் மூலம் கொண்டு வருவதற்கு அறிவுறுத்தல் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்தார். (இ-7)

## கொரோனா வைரஸை தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும்

### சீன ஜனாதிபதி தெரிவிப்பு



(பீஜிங்)

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான வழிகளை ஆராய வேண்டும் என சீன நாட்டின் ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்தார்.

அந்நாட்டு அரசியல் குழுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் உரையாற்றுகையில்,

புதிய கொரோனா வைரஸ் நாட்டில் வேகமாகப் பரவி வருகிறது. நாடு கொடுமையான சூழலை எதிர்கொண்டிருக்கிறது.

கட்சியின் மத்திய குழுவின் அனைத்து தலைமையையும் வலிமைப்படுத்திச் செயற்படுத்துவது அவசியமாகும். அனைவரும் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதுடன் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான வழிகளை ஆராய வேண்டும். இந்தப் போராட்டத்தில் நிச்சயம் வெற்றியடைய முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

வேகமாகப் பரவிவரும் கொரோனா வைரஸ்க்கு இலக்காகி சீனாவில் இதுவரை 1400 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 55 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## குண்டுதாரி சஹ்ரானின் பெயரில் காரைதீவு தவிசாளருக்குஅச்சுறுத்தல்

(சம்பாந்துறை)



தற்கொலை குண்டுதாரி சஹ்ரானின் பெயரில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ண பிள்ளை ஜெயசிறிலுக்கு தொலைபேசி வாயிலாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இனவாத ரீதியில் கடும் சொற்களில் உரையாடியதோடு சஹ்ரானின் கட்டளைப்படி தன்னைக் கொலை செய்யவிருப்பதாகவும் குறித்த நபர் கூறியதாக முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த நபர் மாவடிப் பள்ளியிலிருந்தே தன்னைத் தொடர்பு கொண்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. (ஜ)

## அரசியல் சூத்திரதாரிகளையும் நீதிமன்றில் நிறுத்த வேண்டும்

### சுனில் ஹந்துன்நெத்தி வலியுறுத்து



(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் ஈடுபட்ட மத்திய வங்கியில் பிரதான பதவிகளை வகித்தவர்கள் போன்றே, அவர்களுக்கு அரசியல் ரீதியான உதவிகளை வழங்கியவர்களையும் நீதியின் முன்பாக நிறுத்த வேண்டுமென சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

குறிப்பாக அர்ஜுன் மகேந்திரன், அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்கள், அவர்களுக்கு அரசியல் ஆலோசனைகளை வழங்கிய அரசியல்வாதிகள் உள்ளிட்டோரும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டியது அவசியமெனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2000- 2015 ஆம் ஆண்டு வரையில் இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான தணிக்கை அறிக்கை நீதிச் செயற்பாடுகளின் பிரகாரமே தயாரிக்கப்பட்டுள்ளதென தெரிவித்த அவர், அந்த அறிக்கை மரண பரிசோதனை அறிக்கையை போன்றதெனவும் தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் வெளிப்பட்டுள்ள விடயங்களை மக்கள் விடுதலை முன்னணி முன்பிருந்தே வலியுறுத்தி வந்ததெனவும், அதனுடன் தொடர்புடையவர்கள், சில காலங்களில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும், ஐக்கிய தேசியக் கட்சியிலும் பின்னர் பொது ஜன பெரமுனவிலும் என மாறி மாறி இருந்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

## போர்க்காயங்களை ஆற்றுவது அவசியம்

### இலங்கை விஜயம் குறித்து அலிஸ் வெல்ஸ் விளக்கம்



(நியூயோர்க்)

இந்தோ பசுபிக்கில் இலங்கையின் அமைவிடம் மூலோபாய ரீதியில் எவ்வளவு முக்கியமானது என்பதை அமெரிக்கா மீண்டும் சுட்டிக்காட்டியது.

இலங்கைக்கான தனது அண்மைய விஜயம் குறித்து நியூயோர்க்கில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்த அமெரிக்காவின் தெற்காசியா மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவிச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கான தனது அண்மைய விஜயத்தின் போது ஆக்கபூர்வமான சந்திப்புக்கள் இடம்பெற்றதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி கோட்டாபயவுடனான சந்திப்பில் நல்லிணக்கம், சீர்திருத்தங்கள் ஆகியவற்றை முன்னெடுக்கும் இலங்கையுடன் தொடர்ந்தும் உறவுகளைப் பேணுவது குறித்து அமெரிக்கா கொண்டுள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கடிதத்தை கையளித்தேன் என அலிஸ் வெல்ஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய, தான் அனைத்து மக்களினதும் ஜனாதிபதியாக விளங்க விரும்புகின்றேன் எனத் தெரிவித்ததை நாங்கள் வரவேற்றுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை இந்தோ-பசுபிக்கில் மிகவும் முக்கியமான இடத்தில் உள்ளது என்பதை சுட்டிக் காட்டிய அலிஸ் வெல்ஸ் இந்து சமுத்திரத்தில் அதிகளவு கேந்திர முக்கியத்துவம் கொண்ட நாடு இலங்கை எனவும் தெரிவித்தார்.

வன்முறை மிகுந்த தீவிரவாதத்தை ஒழித்தல், கடற்சார் பாதுகாப்பைப் பலப்படுத்துவது, போதைப் பொருள் கடத்தலை தடுப்பது, சுதந்திரமான வெளிப்படையான ஆசிய பசுபிக்கினை ஊக்குவிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக வர்த்தகம் முதலீட்டை ஊக்குவிப்பது, போன்ற பகிரப்பட்ட பொதுவான நலன்கள் இரு நாடுகளுக்கும் உள்ளன எனவும் அலிஸ் வெல்ஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் எங்களின் இணைந்த நடவடிக்கையின் சிறந்த தரம் என்பது பொதுவான விழுமியங்களை வலுப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள வெற்றியிலேயே தங்கியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அலிஸ் வெல்ஸ் இலங்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ள போர்க் காயங்களை ஆற்றும் முக்கியமான விடயமும் இதிலொன்று எனத் தெரிவித்தார். (இ-7)

# வவுனியாவில் சோதனை



(நெளுக்குளம்)

வவுனியாவில் ஏ9 வீதியில் இராணுவமும் பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையினை நேற்றுக்காலை தொடக்கம் மேற்கொண்டிருந்தனர்.

வவுனியா புளியங்குளம், ஓமந்தை மற்றும் அதனையண்டிய பகுதிகளிலேயே இவ்வாறு அதிகளவான பொலிஸாரும் இராணுவமும் இணைந்து மோப்ப நாயின் உதவியுடன் சோதனையினை மேற்கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாதுகாப்பு பலப்படுத்துமாறு கூறியதனையடுத்து பொதிகளுடன் வருபவர்களிடமும் சந்தேகத்திற்கிடமான பேருந்துகளிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. (9-299)



# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி 30 ஆம் திகதி போராட்டத்துக்கு அழைப்பு

(நெளுக்குளம்)

வடக்கு- கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் எதிர்வரும் 30 ஆம் திகதி வவுனியாவில் மாபெரும் போராட்டமொன்றிற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிற்கு நீதிகோரிய பேரணி ஒன்றை வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கவுள்ளோம்.

குறித்த போராட்டத்திற்கு அனைவரும் பேதமின்றி அணிதிரண்டு உங்கள் ஆதரவினையும் பங்களிப்பினையும் நல்குமாறு கேட்டு நிற்கின்றோம்.

போர் முடிவடைந்த பிறகு ஓமந்தையிலும் வட்டுவாகலிலும் இராணுவத்திடமே எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம். அத்துடன் வவுனியா, மன்னாரில் அரச கட்டுப்பாட்டு பகுதிகளிற்குள் எமது உறவுகள் காணாமல் போக செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களை புலிகள் பிடித்து சென்றதாக கூறுகின்றமை எப்படி சாத்தியமாகும். எனவே எமக்கு பொறுப்புக்கூற வேண்டிய ஜனாதிபதி அப்பட்டமான பொய்யைச் சொல்கிறார்.

எம்மை ஏமாற்றுவதே அவர்களது நோக்கமாக இருக்கிறது.

தமிழ் அரசியல்வாதிகள் எமது விடயத்தில் அக்கறையாக செயற்படவில்லை. எனவே எமது தன்னிச்சையான போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (9-299)

# வவுனியாவில் மூன்று பெண்கள் பொலிஸாரால் கைது

(நெளுக்குளம்)

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற மாவட்டங்களில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பெண்கள் மூவரை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியிலுள்ள சதொசா விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் மதியம் 12 மணியளவில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக சென்ற பெண்கள் தாம் அணிந்திருந்த ஆடைக்குள் இன்னுமொரு ஆடை அணிந்து அவ் ஆடைக்குள் பொருட்களை திருடி சென்றுள்ளனர். சந்தேகமடைந்த சதொச பணியாளர் சீ.சீ.ரீ.வீ வீடியோவை பார்வையிட்ட போது திருடிச்சென்றது தெரியவந்துள்ளது.

வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸ் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து சீ.சீ.ரீ.வீ வீடியோவின் உதவியுடன் மூன்று பெண்களை கைது செய்துள்ளதாகவும் கொழும்பு, பாணந்துறையை சேர்ந்த 22,45,62 வயதுடையவர்களென்றும் திருடப்பட்டவை 35000 ரூபா பெறுமதியான பொருட்களெனவும் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் முன்னர் திருடியுள்ளதாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்று வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (9-299)

# பிழையாக செயற்பட்டால் அரசை எதிர்ப்போம்

## முன்னாள் பிரதி அமைச்சர் பிரபாகணேசன்

(நெளுக்குளம்)

எமது மக்களிற்கு எதிரான விடயங்களை இந்த அரசு மேற்கொண்டால் எதிர்ப்பதற்கு பின்னிற்கமாட்டோம் என முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,இந்த அரசாங்கம் பயங்கரவாத தடை சட்டத்தை மீண்டும் கொண்டு வருவார்களேயானால் சிறுபான்மை மக்களிற்கு எதிரான ஒரு விடயமாக தான் பார்க்க முடியும். நாம் அரசாங்கத்துடன் இருப்பது எமது மக்களிற்கான அபிவிருத்திகளையும், உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்காகவே தவிர எமது மக்களை சிறுமைப்படுத்துவதற்கல்ல. எனவே பயங்கரவாத தடை சட்டம் கொண்டுவரப்பட்டால் அதற்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்பதை தெளிவாக சொல்ல விரும்புகிறேன்.

எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி சிங்கள பௌத்த பேரினவாதத்தை ஏற்படுத்துவார்களேயானால் இந்த நாட்டை சரியான பாதையிலே முன் கொண்டு செல்ல முடியாது.

எனவே இந்த அரசாங்கத்தின் நல்ல விடயங்களிற்கு நாங்கள் ஆதரவு தெரிவித்து அதன் மூலமாக எமது மக்களுக்கு தேவையான அபிவிருத்திகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயங்கமாட்டோம். அதேவேளை மக்களிற்கு பிழையான செயற்பாடுகள் எதும் நடந்தால் நிச்சயமாக ஆதரவு வழங்கமாட்டோம் என மேலும் தெரிவித்தார். (9-299)



சுதந்திர தினத்தை முன்னிட்டு சுதாகர், மொகமட் அலி, பிரேமசந்திர ஆகிய மூவினத்தையும் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் இன நல்லிணக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கோரிக்கையை முன்வைத்து சக்கர நாற்காலியில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி எதிர்வரும் முதலாம் திகதி பயணிக்கவுள்ளனர். இவர்களின் பயணத்துக்கு உதவும் வகையில் சுவிஸ் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம், சமூக நலன் பண்பாட்டு வார வழிபாட்டு மன்ற தலைவர் சக்தி வித்தகன் சுரேஸ் 20000 ரூபாவை வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் வைத்து நேற்றைய தினம் கையளித்திருந்தார்.

(படம்-முரசுமோட்டை செய்தியாளர்)

# வயல் காணிகளை வழங்குமாறு ஆறுமுகத்தான்குள கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று, தண்ணிமுறிப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள ஆறுமுகத்தான் குளத்தில் உள்ள 110 குடும்பங்களுக்கு வயல் காணி வழங்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றன. ஆறுமுகத்தான் குளம் கிராம மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தினைச் சுற்றி நித்தகைக்குளம், வீரன்குளம், ஆண்டான்குளம், தண்ணிமுறிப்புக்குளம், மறிச்சுக்கட்டிக்குளம் என்பன காணப்படுகின்றன. ஆனால் ஆறுமுகத்தான் குளத்தில் வாழ்கின்ற குடும்பங்களுக்கு வயல் நிலம் இல்லாத நிலைமை கடந்த எழுபது ஆண்டுகளாக தொடர்கின்றன.

வயல் காணியினை வழங்குங்கள் என வடமாகாண ஆளுநர், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ஆகியோருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டும் வயல் காணிகள் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக இக்கிராமத்தில் வாழ்கின்ற கூடுதலான குடும்பங்கள் கூலித் தொழிலினையே மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கரைதுறைப்பற்றின் பிரதேச சபையின் உறுப்பினர் உ.றனிஸ்ஸா, ஆறுமுகத்தான் குளத்தில் வாழ்கின்ற குடும்பங்களுக்கு வயல் காணியினை வழங்கி வாழ்தார மேம்பாட்டிற்கு உதவுமாறும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-350)

# கிளி.வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் பிரதமருக்கு அறிக்கை

## நிறுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை


(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்று வந்த வீட்டுத் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத நிலை தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்று தயாரித்து பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விரைவில் வீட்டுத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுகளில் கடந்த காலத்தில் தனி மற்றும் திட்டங்களாக வீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் திட்டங்களாக ஆரம்பிக்கப்பட்ட வீடுகளுக்கு 40 வீதமான நிதியும், தனிநபர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவுக்கு குறைவான நிதியும் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் திறைசேரியில் நிதியின்மையால் தொடர்ந்தும் வீட்டுத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் எனது கவனத்திற்கு கொண்டு வந்தனர். எனவே இதனை வீட்டுத் திட்டத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமரின் கவனத்திற்கும், வீட்டுத்திட்ட இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு சென்றமைக்கு அமைவாக அவர்களின் பணிப்புரையினையடுத்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து வருகை தந்த உயர்மட்ட குழுவினருடன் கிளிநொச்சியின் பல பிரதேசங்களுக்கும் நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்து தற்போது பூரணமான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு பிரதமர் மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை நின்று போயுள்ள வீட்டுத் திட்டங்களை மீளவும் முன்னெடுக்க 1959 மில்லியன் ரூபா நிதி தேவையாகவுள்ளது. எனவே இந்நிதி படிப்படியாக விடுவிக்கப்பட்டு வீட்டுத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். என மேலும் தெரிவித்தார். (9-350)

## வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவியேற்பு



(குருமன்காடு)

வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகா ரியாக பீ.ஆர்.மானவடு நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். கேகாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இரண்டரை வருடங்கள் கடமையாற்றிய பீ.ஆர்.மானவடு இடமாற்றம் பெற்று நேற்று முன்தினம் முதல் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிவருகிறார் (9-250-299)

## முல்லை.முத்துஜயன்கட்டு குளத்தின் கீழ்

# ஆயிரத்து 200 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாயநிலம் கைவிடப்பட்ட நிலையில்

## விவசாய அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு முத்துஜயன்கட்டு குளத்தின் கீழ் சுமார் 1200 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பு இதுவரை பயிர்ச் செய்கைகளுக்கு உட்படுத்தப்படாத நிலையில் காணப்படுவதாக விவசாய அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்துஜயன் கட்டு நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள முத்துஜயன்கட்டு இடதுகரை, வலது கரை வாய்க்கால்களின் கீழ் உள்ள பெருமளவான நிலப்பரப்புக்கள் பயிர்ச்செய்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி குளத்தின் கீழ் உள்ள ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்களில் அநேகமானவை இயங்காதநிலையில் காணப்பட்டாலும் கூடுதலான காணிகளில் பயிர்ச்செய்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும் முத்துஜயன்கட்டு இடது கரை வாய்க்காலின் கீழ் சுமார் 1200 ஏக்கர்வரையான நிலப்பரப்புக்கள் எதுவித பயிர்ச்செய்கைகளுக்கும் உட்படுத்தப்படாத நிலையில் கைவிடப்பட்டு காடுகள் மண்டிக் காணப்படுகின்றன.

எனவே குறித்த காணிகளை பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்ற வகையில் துப்புரவு செய்து பயிர்ச்செய்கைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரதேச விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (9-315)

## எழுத்து மூலமான உறுதிப்பாட்டையடுத்து

# ஆதன வரிக்கு எதிரான போராட்டம் இடைநிறுத்தம்

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச சபையினரால் எங்குமில்லாத அளவில் அதிகரித்த வீதமான பத்து வீதத்தில் அறவிடப்படுகின்ற ஆதன வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்ற போராட்டம் கரைச்சிப் பிரதேச சபையின் எழுத்து மூலமான உறுதிப்பாட்டையடுத்து கைவிடப்பட்டுள்ளது.

ஏழு நாட்களுக்குள் பொருத்தமானதும், ஏற்புடையதுமான தீர்வினை வழங்குவதாக எழுத்து மூலமான உறுதிப்பாட்டை கரைச்சிப் பிரதேச சபையின் உப தவிசாளர் சி. சிவபாலன் வழங்கியதனை தொடர்ந்து உண்ணா விரதம் கைவிடப்பட்டுள்ளது.

முன்னதாக கரைச்சிப் பிரதேச சபையின் சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் 11 பேரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு உறுப்பினருமாக 12 உறுப்பினர்கள் அவசரமான விசேட சபை அமர்வினை கூட்டுமாறு கோரி கடிதம் வழங்கியிருந்தார்கள் அதற்கமைய வரும்புதன்கிழமை விசேட சபை அமர்வு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த குமாரசாமி மகேந்திரனுக்கு முகவரியிடப்பட்டு உப தவிசாளரினால் நேற்று முன்தினம் மாலை ஏழு மணியளவில் கடிதம் வழங்கப்பட்டது. கடிதத்தினை ஏற்றுக்கொண்ட அவருக்கு உப தவிசாளர், ஆளும் தரப்பு பிரதேச சபை உறுப்பினர் க.குமாரசிங்கம், கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் தலைவர் செயலாளர் ஆகியோர் குடிப்பதற்கு நீர் வழங்கி போராட்டத்தை நிறைவுக்குக் கொண்டுவந்தனர். (9-100-271-312-350)

## "நேர்மையான பொதுத் தேர்தல்" விழிப்புணர்வு செயலமர்வு.



(மன்னார்)

"நேர்மையான பொதுத் தேர்தல் 2020" எனும் கருப்பொருளில் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் பவ்ரல் அமைப்பின் வழி நடத்தலுடன் மன்னாரில் நேற்று முன்தினம் விழிப்புண்ர்வு செயலமர்வு இடம் பெற்றது.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் பிரதான மண்டபத்தில் இடம் பெற்ற குறித்த விழிப்புணர்வு செயலமர்வில் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார், மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன், பவ்ரல் அமைபபின் சுதந்திரமான நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் ச.சிறீதரன், சமூக செயற்பாட்டாளர் மெடோசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது நாட்டில் இடம் பெற்ற தேர்தல்கள் தொடர்பாக ஆராயப்பட்டதோடு, 2020 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் நேர்மையான் பொதுத் தேர்தலாக அமைய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக தேர்தலில் போட்டியிடவுள்ள ஒரு வேட்பாளர் கொண்டிருக்க வேண்டிய தகுதிகள் தொடர்பாகவும், மக்கள் தெரிவு செய்ய வேண்டிய மக்கள் பிரதிநிதி இருக்க வேண்டிய தகுதி தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (9-285)




# கால்நடைகளினால் விபத்துக்கள் அதிகரிப்பு

(முரசுமோட்டை)

பரந்தன் ஏ-9 வீதி மற்றும் பரந்தன்-முல்லை வீதிகளில் கால்நடைகளினால் விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பரந்தன் ஏ-9 வீதியில் இரவு நேரங்களில் வீட்டு வளர்ப்பு நாய்கள் மற்றும் மாடுகள், ஆடுகள் என்பன அவிழ்த்து விடப்படுவதால் பிரதான வீதிக்கு வரும் நாய்கள் மற்றும் மாடுகள் திடீரென வீதியை குறுக்கிடுவதால் வீதியால் வருகின்ற வாகனங்கள் மேற்படி கால்நடைகளின் மீது மோதி விபத்துகளை சந்திக்க வேண்டியுள்ளது.

இதேவேளை பரந்தன்-முல்லைத்தீவு பிரதான வீதியின் கரையோரங்களில் மேய்சசலுக்காக கால் நடைகள் கட்டிவிடப்படுவதால் கால்நடைகள் கட்டப்பட்ட கயிற்றினையும் இழுத்து கொண்டு வீதியின் குறுக்கே வருவதால் விபத்துக்கள் அதிகளவில் ஏற்படுகின்றன.

இதுபோன்ற விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரிப்பதால் கால்நடைகளை வளர்ப்போர் தங்களின் கால்நடைகளை வீதியின் கரையோரங்களில் மேய்ச்சலுக்காக கட்டுவதை தவிர்த்தும் இரவு நேரங்களில் கால்நடைகளை அவிழ்த்து விடுவதையும் தவிர்க்குமாறும் கரைச்சி பிரதேச சபை மேற்படி சம்பவங்களை கருத்தினை கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-318)

## மத நல்லிணக்க கலந்துரையாடல்





(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட சர்வமத குழுவின் ஏற்பாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் சுற்றுவட்ட வீதியிலுள்ள பிரதேச பல்நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

நல்லிணக்கம் தொடர்பான மாவட்ட சர்வ மதக்குழுவிற்கும், சிவில் பாதுகாப்புக்குழு, சமூகப் பிரதிநிதிகள், மத குருமார்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமான இக் கலந்துரையாடல் பிற்பகல் வரையும் இடம்பெற்றது.

மக்களுக்கிடையே இன வன்முறைகளை ஏற்படுத்தாத வகையில் தொடர்ந்தும் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாகவும் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. (9-299)

# முல்லை.பிரதேச வைத்தியசாலையில் மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி நாளை மறுதினம் போராட்டத்துக்கு அழைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையில் மருத்துவர்கள் இன்மை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை மறுதினம் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனையின் வாயிலை மறித்து பாரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாக முல்லைத்தீவு நகர அபிவிருத்தி ஒன்றியம் வர்த்தக சங்கத்தினர், பேருந்து சங்கத்தினர், பொது அமைப்புக்கள், பொதுச் சந்தை சங்கத்தினர், கிராம அமைப்புக்கள் ஒன்றிணைந்து அறிவிப்பினை விடுத்துள்ளார்கள்.

இது தொடர்பிலான ஊடக சந்திப்பு முல்லைத்தீவு நகர வர்த்தக சங்க கட்டடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது சமூக சேவையாளர் பீற்றர் இளஞ்செழியன், முல்லைத்தீவு வர்த்தக சங்கத் தலைவர் ம.அந்தோனிப்பிள்ளை, முல்லைத்தீவு வர்த்தக சங்கச் செயலாளர் மு.சிவநேசராசா ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்கள்.

அதாவது முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையானது நூறு ஆண்டு வரலாற்றினை கொண்ட மருத்துவமனை. மூன்று வைத்தியர்கள் கட்டாயம் இருக்க வேண்டிய ஒரு மருத்துவமனை. 2018 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் அங்கு நிரந்தர வைத்தியர் இல்லாத நிலை தொடர்ந்தும் நிலவி வருகின்றது.


இந்த விடயம் குறித்து கடந்த 23 ஆம் திகதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவமனையின் அபிவிருத்திக்குழு மக்கள் அமைப்புக்களை அழைத்து பேச்சு நடத்தியுள்ளார். ஆனால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.


மாவட்டத்தின் சாலை தொடக்கம் கொக்குளாய் பகுதிகளில் இருந்து அதிகளவான நோயாளர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனையாக முல்லைத்தீவு பிரதேச மருத்துவமனை காணப்படுகின்றது. இவ்வாறு மக்களின் சுமைகளை இரட்டிப்பாக்கும் நோக்கில் மக்கள் மாவட்ட மருத்துவமனைக்கு செல்லவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.


இதற்கு தீர்வு கிடைக்காத நிலை தொடர்ந்தும் இருப்பதன் காரணத்தினால் முல்லைத்தீவு நகர அபிவிருத்தி ஒன்றியம் வர்த்தக சங்கத்தினர், பேருந்து சங்கத்தினர், பொது அமைப்புக்கள், பொதுச் சந்தை சங்கத்தினர், கிராம அமைப்புக்கள் ஒன்றிணைந்து மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக தொடர்கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்கள். (9-281)





# இந்தியக்குடியரசு தினம்







(சென்னை)

இந்தியக் குடியரசு நாளின் 70ஆவது ஆண்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தேசியக்கொடியை ஏற்றினார்.

இதனைத் தொடர்ந்து முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக்கொண்டார். இவ் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பங்குபற்றினர்.

இதேபோல், தமிழகத்தில் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் சென்னை மெரினாவில் தேசியக் கொடி ஏற்றி மரியாதை செலுத்தினார்.

அத்துடன் இராணுவ அணி வகுப்பினையும் ஏற்றுக்கொண்டார்.

இந்திய குடியரசு தினமான நேற்று தலைநகர் டில்லியில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் தமிழகத்தின் ஐயனார் சிலையுடன் கூடிய அலங்கார ஊர்தி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ஆறு செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தவுள்ள ஈரான்

(டெஹ்ரான்)

விண்ணில் செலுத்த 6 செயற்கைக் கோள்களை தயாரித்துள்ளதாக ஈரான் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப அமைச்சர் எம்.ஜே.அசாரி ஜஹ்ரோமி தெரிவித்தார்.

அத்துடன் மேலும் ஒரு செய்மதியை வடிவமைக்கும் நடவடிக்கையானது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர். தனது டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டினார்.


ஈரானிய நாட்காட்டியின் முறைப்படி மார்ச் 19 ஆம் திகதி இந்த செய்மதிகளை பூமியின் சுற்று வட்டப் பாதையில் செலுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை செயற்கைக் கோள் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு நிலையம் மற்றும் ஜாபர் செயற்கைக்கோள் வரவேற்பு நிலையம் நாடு முழுவதும் மூன்று விண்வெளி நிலையங்களில் நிறுவப்பட்டன என அவர் கூறினார்.

இந்தத் துறையில் தொழில்நுட்பக்குழு மற்றும் நிபுணர்களின் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு இமாம் கோமெய்னி ஈரானின் ரொக்கெட ஒன்று வெடித்ததாக மேற்கத்தேய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும் ஈரானிய அதிகாரிகள் இதனை மறுத்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ஆப்கானில் வான்வழித் தாக்குதல் 14 தலிபான் பயங்கரவாதிகள் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அரசுப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகள் 14 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் ஒருசில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு அதை ஆளுமை செய்து வருகின்றனர். மேலும், தங்களுக்கு கட்டுப்படாத பொது மக்களை இரக்கமின்றி கொன்று குவித்து வருகின்றனர்.

இந்தப் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக ஆப்கானிஸ்தான் அரச படையினரும் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டுப் படையினரும் தரைவழி மற்றும் வான்வழித் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் தென்கிழக்கே அமைந்துள்ள காந்தகார் மாகாணத்தில் உள்ள மைவ்வன்ட் மாவட்டத்தில் தலிபான் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக ஆப்கானிஸ்தான் இராணுவத்திற்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து பயங்கரவாதிகளின் இடங்களை குறிவைத்து நேற்றுமுன்தினம் இரவு ஆப்கானிஸ்தான் படை திடீர் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் 14 தலிபான் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும், 10 பயங்கரவாதிகள் படுகாயமடைந்ததாக இராணுவ செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார். (ஜ-2)

# துருக்கியில் சக்திவா... இடிபாடுகளுக்குள் சிக்...

## ♦1400 பேர் படுகாயம் ♦

(அங்காரா)

துருக்கியின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் இதுவரை 30 பேர் உயிரிழந்தனர்.

6.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் தலைநகர் அங்காராவிற்கு கிழக்கே உள்ள எலாசிக் மாகாணத்தை கடந்த வெள்ளிக்கிழமை தாக்கியது.

இதனால் கட்டடங்கள் பல



# கட்டடம் இடிந்து வி...

(டில்லி)

இந்தியத் தலைநகரான டில்லியில் புனர்நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் ஐவர் உயிரிழந்துள்ளதுடன், எட்டுப் பேர் காயமடைந்தனர்.

டில்லியின் பஜன்பூர் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் கட்டடத்தின் கூரை இடிந்து விழுந்து இரண்டாம் மாடியில் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நான்கு மாணவர்கள் உயிரிழந்ததுடன் எட்டு மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத் திய

# சீனாவில் மிரட்டும் கெ... சிகிச்சையளித்த வை...

(பீஜிங்)

கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளான வைத்தியரும் உயிரிழந்த தகவல் சீன மக்களுக்கு மிகுந்த அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது.

சீனாவில் வேகமாக கொரோனா வைரஸ் பரவி வருகிறது. இது ஒரு தொற்றுநோய். 55 பேர் வைரஸ் தாக்கி உயிரிழந்தனர்.

கொரோனா வைரஸ் பரவிய முதல் நகரமான வுஹான் நகரம் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது. யாரும் மற்ற நகரங்களுக்கோ. மற்ற நகரத்தில் இருந்து வுஹானுக்கு செல்லவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொற்று பரவியுள்ள பலருக்கும் தீவிர சிகிச்சையை வைத்தியர்கள் அளித்து வருகின்றனர். அந்த வகையில், ஸின்ஹுவா வைத்தியசாலை வைத்தியருக்கும் இந்த தொற்று பரவியுள்ளது. இந்த வைத்தியசாலையில் அவர் சிரேஷ்ட வைத்தியர்.. அறுவைச்சிகிச்சை நிபுணராக கடமையாற்றி வந்துள்ளார். கடந்த வாரமே இவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. அதற்கான சிகிச் சையும் அளிக்கப்பட்டு வந்தது.

ஆனால், 9 நாள் போராடியும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார். (ஜ-2)

# அசாமில் இடம்பெற்ற குண்...

(டில்லி)

அசாமில் தேசிய நெடுஞ்சாலையருகே இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

அசாம் மாநிலத்தில் உள்ள கடையொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை அடுத்து. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாக அம்மாநிலத்தின்



# வெளிநாடு

## வாய்ந்த நிலநடுக்கம் சிக்கி 30 பேர் உயிரிழப்பு

### ♦மீட்புப் பணிகள் தீவிரம்




இடிந்து வீழ்ந்ததில் கட்டடங்களின் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

மேலும் இந்நிலநடுக்கம் காரணமாக 1,400 பேர்வரை படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்றுவருவதாக நாட்டின்பேரிடர் மற்றும் அவசரநிலை மேனாண்மை தெரிவித்தது. (ஐ-2)

## விழுந்து ஐவர் பலி!

நேற்று ...
பெற்ற ...
ரை இடி ...
ல்வி நட ...
மாண ...
ணவர் ...
வத் திய ...


சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கட்டடம் இடிந்து விழுந்தமைக்கு சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

செலவுகளைக் குறைப்பதற்காகப் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் புறக்கணித்து, மலிவான பொருட்களைக் கொண்டு கட்டடங்கள் எழுப்பப்படுவது இந்தியாவில் நிகழும் கட்டட இடிபாடுகளுக்கு முக்கிய காரணமாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஐ-2)

## கொரோனா வைரஸ் வைத்தியர் உயிரிழப்பு

ப்பட்டுள் ...
ம் தீவிர ...
அளித்து ...
. ஸின் ...
ருக்கும் ...
வைத்தி ...
த்தியர் ...
மையா ...
வருக்கு ...
தற்கான ...
சிகிச்சை ...
உயிரி ...
(ஐ-2)



## குண்டுவெடிப்பால் பதற்றம்



பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

நாட்டின் 71 ஆவது சுதந்திர தினம் நேற்று நடைபெற்ற நிலையில், குறித்த சம்பவம் இடம் பெற்றமை பரபரப்பை ஏற்படுத்தியது.

நாடுமுழுவதும் ஏராளமான பாதுகாப்புப் படையினர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன், தீவிர சோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு உலகம் முழுவதும் 1,354 பேர் பாதிப்பு

(பீஜிங்)

உயிர்களை காவுக் கொண்டு வரும் கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு, இதுவரை உலகம் முழுவதும் 1,354 பேர் பாதிக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவை தவிர்த்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, அவுஸ்திரேலியா, நேபாளம், வியட்நாம், ஹொங்கொங், மாகூகு, மலேசியா போன்ற நாடுகளில் இந்த நோயின் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் மேலும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்குப் பலரும் இலக்காகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற நிலையில், இந்தக் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் உலகநாடுகள் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.



இதுவரையில் கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு, 55 பேர் உயிரிழந்தனர். மேலும், சீனா முழுவதும்1,287 பேருக்கு வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆனால் ஐரோப்பிய நாடுகளில் இந்த நோயின் பாதிப்பு இல்லை என்று நிம்மதி பெருமூச்சு விட்ட நிலையில், பிரான்சில் மூன்று பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டுள்ளது.


கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு உட்பட்ட ஒருவரை தனிமைப் படுத்தாவிட்டால், அந்த நோய் தொற்று அவரைச் சுற்றி உள்ள 14 பேருக்கு பரவும் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-2)

## பிரெக்ஸிற் தினத்தை குறிக்கும் 50 பவுண்ட் நாணயம் வெளியீடு

(புரூஸ்லஸ்)

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறியதைக் குறிக்கும் 50 பவுண்ட் நினைவு நாணயத்தை நிதியமைச்சர் சஜித் ஜாவிட் வெளியிட்டார்.

குறித்த நாணயம் "அமைதி, செழிப்பு மற்றும் அனைத்து நாடுகளுடனான நட்பு" என்ற பொறிப்பையும் ஜனவரி 31 ஆம் திகதியையும் தாங்கி நிற்கின்றது.




அத்தோடு குறித்த நாணயங்களை ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுவதற்கு அதாவது எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னரே அச்சிடுமாறும் அறிவுறுத்தல் வழங்கினார்.

அதன் பிரகாரம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் சுமார் மூன்று மில்லியன் பிரெக்ஸிட் நாணயங்கள் நாடுமுழுவதும் புழக்கத்தில் இருக்கும் என்றும் மேலும் ஏழு மில்லியன்கள் இந்த ஆண்டின் பிற்பகுதியில் சேர்க்கப்படும் என்றும் நிதி அமைச்சர் சஜித் ஜாவிட் தெரிவித்தார்.(ஐ-2)

### நீடிக்கும் போர்ப்பதற்றம்

## அமெ.படையினரை வெளியேற்ற ஒன்று திரண்ட ஈராக்கியர்கள்

(பக்தாத்)

அமெரிக்கப் படையினர் தங்கள் நாட்டிலிருந்து வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி, ஈராக்கில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

அமெரிக்கப் படையினர் அனைவரும் ஈராக்கிலிருந்து வெளியேற வேண்டும் என வலியுறுத்தி 10 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று அந்த நாட்டின் மதகுரு முக்தாடா அல்சாதர் அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்கமைய, முஸ்லிம்களின் தொழுகை நாளான கடந்த வெள்ளிக்கிழமை மத்திய பக்தாத்தில் ஆயிரக்கணக்கானோர் அணிதிரண்டனர்.

இதன்போது, ஆயிரக்கணக்கான ஈராக்கிய கொடிகளுக்கு மத்தியில் நின்றுகொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், அமெரிக்காவிற்கு எதிராக எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிராகவும், அமெரிக்க வீரர்கள் ஈராக்கிலிருந்து வெளியேற வேண்டும் என வலியுறுத்தியும் அவர்கள் கோஷங்கள் எழுப்பினர்.

இதற்கிடையே இந்த ஆர்ப்பாட்டத்தில் இரண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் உயிரிழந்தனர் மற்றும் 25 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கில் அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலில் ஈரான் உளவுப் படைத் தலைவர் காசிம் சுலைமானி, ஈராக் துணை இராணுவப் படையினர் கொல்லப்பட்டதையடுத்து, ஈரான் மற்றும் அமெரிக்க நாடுகளுக்கிடையில் பதற்றமான நிலை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# சிறுவர் பாதுகாப்பு மத்திய நிலையம் ஜனாதிபதி கோட்டாபயவால் திறப்பு







(கொழும்பு)

விசேட தேவையுடைய சிறுவர்களுக்கென்றே அமைக்கப்பட்டுள்ள நாட்டின் முதலாவது சிறுவர் பாதுகாப்பு மத்திய நிலையமான "ஆயத்தி" தேசிய மத்திய நிலையம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று முன்தினம் முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

அங்கவீனம் என்பது ஒரு தேசிய பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. ஐந்து சிறுவர்களில் ஒருவர் (20%) உடல் அல்லது உளக்குறைபாடுகளைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முற்கூட்டியே கண்டறிந்து தேவையான சிகிச்சைகளை வழங்குவதன் மூலம் அவர்களைச் சிறந்த முறையில் சமூகமயப்படுத்த முடியும். இதற்குத் தீர்வொன்றை வழங்கும் வகையில் அரச துறைக்கும் தனியார் துறைக்குமிடையிலான உடன்பாட்டில் "ஆயத்தி" தேசிய மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 55 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. களனி பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடம் இதற்கான காணியையும் மருத்துவ சேவைகளையும் வழங்க முன்வந்துள்ளது.

நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்து "ஆயத்தி சிறுவர் பாதுகாப்பு மத்திய நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதன் அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்டார். சிறுவர்களின் சுகதுக்கங்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி அவர்களுடன் சுமுகமாக கலந்துரையாடினார்.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, கடற்படைத் தளபதி வைஸ் எட்மிரல் பியல் டி சில்வா, களனி பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் டி.எம்.இ.சேமசிங்க, மருத்துவ பீட பீடாதிபதி மற்றும் இலங்கை "ஆயத்தி" பொறுப்பு நிதியத்தின் தலைவர் பேராசிரியர் நிலந்தி டி சில்வா, "ஆயத்தி" பொறுப்பு நிதியத்தின் உறுப்பினர் ரொஷான் மகாநாம உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# நல்லாட்சியில் 50 ரூபாய் கிடைக்காமைக்கு திறைசேரியின் எதிர்ப்பே காரணம்

## அரவிந்தகுமார் குற்றச்சாட்டு



(கண்டி)

நல்லாட்சி அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 50 ரூபாயால் அதிகரிக்க முயற்சிகளை மேற்கொண்டிருந்ததெனச் சுட்டிக்காட்டிய அரவிந்தகுமார் எம்.பி.திறைசேரி எதிர்ப்பு வெளியிட்டதாலேயே அது சாத்தியப்படாமல் போனதெனவும் தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் அவர் வழங்கிய நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்டு மேலும் தெரிவித்த அவர்,

மலையக சமூகத்தைச் சேர்ந்த நான்கு பேர் இன்றளவில் நீதிவான்களாக உள்ளதாகவும் அதனால் மலையக சமூகம் அபிவிருத்தி அடைய முடியாத சமூகமென கூறுவதை ஒருபோதும் ஏற்றுகொள்ள முடியாதெனவும் தெரிவித்தார்.

இருப்பினும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் மலையகச் சமூகம் பின்னடைவைச் சந்தித்திருப்பதாக தெரிவித்த அவர், 16 பிரதிநிதித்துவங்களை கொண்டிருக்க வேண்டிய மலையகம் 9 நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரமே கொண்டிருப்பது கவலைக்குரியதெனவும் தெரிவித்தார்.

குறிப்பாக நுவரெலியா, பதுளை, கண்டி உள்ளிட்ட மாவட்டங்களில் மலையக மக்கள் செறிந்து வாழ்ந்தாலும் பல மாவட்டங்களில் பரவலடைந்து வாழும் சமூகமாக மலையக சமூகம் இருப்பதாலேயே இந்நிலை காணப்படுவதாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் உரிய முயற்சியை மேற்கொண்டால் உள்ளூராட்சிச் சபைகளில் மலையக மக்களின் பிரதிநிதித்துவங்களை அதிகரித்துகொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

குறிப்பாக கதிர்காமம் போன்ற பகுதிகள் சிங்களப் பிரதேசங்கள் எனக் கருதப்பட்டாலும் அங்கும் 2 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் இருந்தாலும் அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை உருவாக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் வாழும் தமிழர்கள் பலர் அந்தச் சமூகத்தில் கலாசாரத்துக்குள்ளே மூழ்கி விடுகிறார்கள் எனத் தெரிவித்த அவர். அந்த மக்களை தெளிவுபடுத்துவதற்கான முயற்சிகள் அவசியமெனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மொனராகலை மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மலையகத் தமிழர்கள் தமக்கான அரசியல் அங்கீகாரத்தை உருவாக்கிக் கொள்ள அச்சப்படும் நிலைமையே காணப்படுவதாகவும் புதியவர்கள் அரசியலுக்கு வரும் போது ஏனைய சமூகங்களின் எதிர்ப்பை சந்தித்துக்கொண்டே வரவேண்டும் என்ற நிலைமை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

தேயிலைத் துறையால் நாட்டுக்கு வருமானம் இல்லை எனக் கூறப்பட்டாலும் அதனால் இன்று வரை அரசாங்கம் பெருமளவு வருமானம் ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மையெனவும் தெரிவித்த அவர், ஜனாதிபதி தனது அதிகாரங்களுக்கு அப்பால் சென்றும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும் என மேலும் தெரிவித்தார்.(ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அனுசரித்துப் போவது எப்படி?

சில பேரைப் பற்றி இப்படி சொல்வது உண்டு. ''அடுத்தவர்களை அனுசரித்து நடந்து கொள்ளத் தெரியவில்லை... அவன் என்ன சேர் மனிதன்?'' என்பார்கள். சக மனிதர்களுடன் எப்படிப் பழகுவது என்பது தெரியாததனாலேயே... பல பேர் இன்றைக்கு சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்... வசதி வாய்ப்புக்கள் சரியாக இருக்கும்... ஆனால் வாழ்க்கை சரியாக இருக்காது. இன்னொருவரிடம் எப்படிப் பேசுவது... பழகுவது தெரியாததனாலேயே இந்த அவஸ்தை! சரி... இந்த அவஸ்தையில்லாமலே வாழ்வது எப்படி? இதற்கு அனுபவசாலியாகள் சில வழிமுறைகளைச் சொல்கிறார்கள்... அதெல்லாம் என்னனென்ன என்பதை இப்பொழுது தெரிந்து கொள்வோம்.

முதலிலே... நமது நாக்கு நமது கன்ரோலில் இருக்க வேண்டும். வார்த்தைகளைக் கொட்டிவிட்டு பின்னர் அள்ள முடியாமல் கிடந்து கஷ்ரப்படக் கூடாது! எப்படிப் பேசுகிறோம் என்பது முக்கியம். பேசும் போது எப்படி முகத்தை வைத்திருக்கிறோம் என்பது முக்கியம்... அன்பாக பேசினாலும் நன்றாக இருக்கும்.

அப்படிப் பேசும்போது ஆதரவாக அவர் தோள் மேலே ஒரு கையைப் போட்டுக் கொண்டு பேசினால் இன்னும் நன்றாக இருக்கும். இரண்டாவது விடயம். இன்னொருவரிடம் பேசும் போது வாக்குறுதிகளை அள்ளி வீசக்கூடாது. கொடுக்கும் வாக்குறுதி குறைவாக இருக்க வேண்டும்.

அப்படிக் கொடுத்த வாக்குறுதியைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும்! நாம் ஒருவரைப் பாராட்டுகிறோம் அல்லது இவரைப் பற்றி அபிப்பிராயம் சொல்கிறோம் என்றால்... அது ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும்... நமது பாராட்டு அல்லது விமர்சனம் அடுத்தவருடைய முன்னேற்றத்திற்கு உதவுகிற மாதிரி இருக்க வேண்டும்.

நாங்கள் சொல்வதைக் கேட்டுவிட்டு அவன் தலையிலே கையை வைத்துக் கொண்டு இருக்கக் கூடாது! எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டும்... முகம் மலர்ச்சியாக இருக்க வேண்டும்! மனிதன் என்று இருந்தால் வருத்தம்–கவலை–ஏமாற்றம் எல்லாம் இருக்கத்தான் செய்யும்... அதெல்லாம் மனதிலே இருக்கட்டும்!

அந்த வருத்தமும் கவலையும் ஏமாற்றமும் சேர்ந்து கொண்டு நமது முகத்திலே இருக்கும் மலர்ச்சியை மூடி மறைக்கிறதுக்கு நாங்கள் இடம்கொடுத்து விடக்கூடாது.

எந்த விடயத்தைப் பற்றி யாரிடம் பேசினாலும் வெளிப்படையாகப் பேச வேண்டும்... திறந்த மனதுடன் பேச வேண்டும்... மூடி மறைத்து மென்று விழுங்கிக் கொண்டு இருக்கக்கூடாது... இன்னொருவரிடம் பேசும்போது விவாதம் செய்யுங்கள். அது தவறு இல்லை... ஆனால் வாதாடிக் கொண்டிருக்காதீர்கள். அதாவது Discuss பண்ணலாம். ஆனால் Argue பண்ணக் கூடாது!

நம்மிடம் உள்ள இருக்கும் நல்ல குணங்களை நாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது... அந்த நல்ல குணங்களே நம்மைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும்... அது மாதிரி நடந்து கொள்ளவேண்டும்!

அதே மாதிரி அடுத்தவர்களிடம் உள்ள கெட்ட குணங்களைப் பற்றி அவசியமில்லாமல் நாம் பேசவேண்டியதில்லை! உங்களைப் பற்றி யாராவது தவறாகப் பேசுகிறார்களா...? அப்படி அவர்கள் பேசுவதில் உண்மையில்லையா...?

அப்படி என்றால் அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம் விட்டுவிடுங்கள்... அது தானாகவே போய்விடும்! ஒரு நாலைந்து பேராகப் பேசிக்கொண்டு இருக்கிறார்களா... எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்! யாரையும் அலட்சியப்படுத்தாதீர்கள்...! தாமாஷாகப் பேசலாம்... ஆனால் உங்களுடைய தமாஷ் மற்றவர்களைக் கேலி செய்வதாக இருக்கக் கூடாது!

நமக்குக்கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லையே என்னும் தவிப்பு நம்மிடம் இருக்கக்கூடாது. அது தேவையில்லை! உங்கள் செயற்பாடுகள் தெளிவாக இருக்கட்டும்! பாராட்டு தானாக உங்களுக்கு தேடிக்கொண்டுவரும். இன்னொரு மனிதனுடைய மனதிலே கௌரவமான ஒரு இடத்தைப் பிடிக்க வேண்டும் என்றால் நாங்கள் இந்தக் குணத்தையெல்லாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்?

இதெல்லாம் அனுபவசாலிகள் சொல்லியிருக்கும் குறிப்புக்கள். இந்தக் குறிப்புகளைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அது முக்கியம். நாம் புரிந்து கொண்டால் என்ன ஆகும் தெரியுமா? இதைக்கேளுங்கள்.

ஒருவர் வந்தார். ''சேர்... அடுத்தவர்கள் தோள் மேலே கையைப் போட்டுக் கொண்டு அன்பாகப் பேச வேண்டும் என்று சொன்னீர்கள். அப்படித்தான் பேசினேன். அவர் முதுகைக்கூட தட்டிக்கொடுத்தேன். என் வேலை போய்விட்டது சேர்... வீட்டுக்கே அனுப்பி வைத்து விட்டார்கள்!'' என்றார். "யாரிடம் அவ்வாறு பேசினீர்கள்?'' என்று கேட்டேன் .

"என் முதலாளியிடம் சேர்!'' என்றார் மிகவும் சோகமாக!

# அடக்கு முறைகளுக்கு எதிராக துணிவுடன் ஊடகவியலாளர்கள் செயற்படுகின்றனர்

## சிறிநேசன் எம்.பி. பெருமிதம்



(ஏறாவூர்)

ஒடுக்குமுறைகள், அடக்குமுறைகள், சர்வாதிகாரம் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்கு எதிராகத் தங்களது உயிரையும் பொருட்படுத்தாது துணிவுடன் செயற்படுகின்றவர்கள் தான் ஊடகவியலாளர்கள். ஊடகவியலாளர்களின் ஒற்றுமையான குரல்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் பக்கபலமாக இருக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 14ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஸ்ரீநேசன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர்கள் எதற்கும் விலை போகாமல் மனிதர்களைப் பாதுகாக்க வேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும்.

உண்மையான ஊடகவியலாளர்களை நாங்கள் எப்போதும் மதிக்க வேண்டும். அவர்களது மரியாதையை எந்த இடத்திலும் குறைத்துவிடக் கூடாது.

அமரர் சுகிர்தராஜனின் நினைவை நாங்கள் மனதில் சுமந்து கொள்கின்றோம். இவ்வாறான ஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் காரணமாகத் தான் தமிழர்களுக்கு எதிரான அநீதிகள் வெளியுலகத்துக்குப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

அதனால் பல அநீதிகள் தடுக்கப்படுகின்றன. அவ்வாறான உன்னதமான சேவை செய்பவர்களை நாங்கள் எப்போதும் மறக்கக்கூடாது.

ஊடகவியலாளர்கள் ஒற்றுமையாகக் குரல் கொடுக்க வேண்டும். ஊடகவியலாளர்களின் ஒற்றுமையான குரல்களுக்கு நாங்களும் பக்கபலமாக இருப்போம்.

மாறாக அதிகார சக்திகளுக்கும், சர்வாதிகாரிகளுக்கும் ஊதுகுழல்களாக ஊடகவியலாளர்கள் இருந்துவிடக் கூடாது.

இன்னும் இன்னும் இவ்வாறான உன்னத உயிர்கள் பறிக்கப்படுகின்ற சூழல் இந்த நாட்டில் ஏற்பட்டுவிடக் கூடாது. அவ்வாறு ஏற்பட்டால் நாட்டின் ஜனநாயகம் பொய்த்துப் போய்விடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மலையகத்திற்கான ரயில்சேவை பாதிப்பு



(கண்டி)

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பொருட்களை ஏற்றிசென்ற புகையிரதம் ஒன்று நாவலப்பிட்டிய 132 மைல்கல் இடத்தில் தடம் புரண்டுள்ளமையால் மலையகத்திற்கான புகையிரத சேவை பகுதி அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டிய புகையிரத நிலையத்தின் புகையிரத கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை 10 மணியளவில் இந்த ரயில் தடம்புரண்டுள்ளதாக நாவலப்பிட்டிய புகையிரத கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. கொழும்பில் இருந்து பதுளை நோக்கி செல்லும் புகையிரதம் மற்றும் பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கும் இரண்டு புகையிரதங்களும் தடம்புரண்ட பகுதியில் இருந்து வேறு ஒரு புகையிரதத்தின் ஊடாக போக்குவரத்தினை மேற்கொள்வதாக குறித்த கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## மதுபோதையில் சகோதரியை கொலை செய்தவர் கைது

(சென்னை)

இந்தியாவின், சென்னையில் தனது சகோதரியை கொலை செய்த குற்றச்சாட்டில் 50 வயதுடைய இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக 'The New Indian Express' செய்தி வெளியிட்டது.

இலங்கையைச் சேர்ந்த ஆர். தரகேஸ்வரி (உயிரிழந்த நபர்) தனது தாய் மற்றும் மகனுடன் சென்னையின் வளசரவாக்கத்தில் ஒரு வாடகை வீட்டில் தங்கியிருந்தார்.

இந் நிலையில் இலங்கையில் வசிக்கும் அவரது சகோதரர் குகதாசன் என்பவர் சில நாட்களுக்கு முன்பு சபரிமலையாத்திரை மேற்கொள்வதற்காக இந்தியாவுக்கு சென்றார்.

யாத்திரை முடிந்து சென்னையிலுள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு சென்று அங்கு தங்கியிருந்து மது அருந்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இதன்போது தரகேஸ்வரியுடன் இடம்பெற்ற வாக்குவாதம் காரணமாக அவரை கத்தியால் குத்தி கொலை செய்தார்.

மேலும் அவரது தாயையும் தாக்கியுள்ளதாகவும் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் தெரிவித்துள்ளதுடன், இதன் பின்னர் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

## புதிய அரசாங்கத்தால் அனைத்தையும் செய்ய முடியாது

### மெதகொட அபய திஸ்ஸதேரர் கூறுகிறார்


(கொழும்பு)

புதிய அரசாங்கம் மற்றும் புதிய ஜனாதிபதி ஆகியோர் அதிகாரத்திற்கு வருவதால் அவர்களால் அனைத்தையும் செய்ய முடியாது என்பது குறித்து மக்கள் விழிப்புடன் இருப்பது முக்கியம் என பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

தெஹிவல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் நாட்டில் இடம்பெறும் விடயங்கள் குறித்து எப்போதும் அவதானமாய் இருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது வேலைத்திட்டங்கள் பயனுள்ளதாக இருந்தால் அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் கூட அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவார்கள் எனவும் நாட்டை பள்ளத்தில் இருந்து மீட்டெடுக்க ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியம் எனவும் பேராசிரியர்



மெதகொட அபயதிஸ்ஸ தேரர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## பள்ளத்தில் விழுந்த ஆட்டோ மூவர் படுகாயம்



(ஹற்றன்)

ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியின் வட்டவல கெரோலினா தோட்டப் பகுதியில் நேற்று ஆட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

குறித்த சம்பவத்தில் ஆட்டோவில் பயணித்த மூன்று பேர் படுகாயங்களுக்குள்ளாகி நாவலப்பிட்ட பிரதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கொழும்பிலிருந்து டயகம நோக்கி பயணித்த குறித்த ஆட்டோ இன்று அதிகாலை 3 மணியளவில் வீதியை விட்டு விலகி சுமார் 75 அடி பள்ளத்தில் விழுந்துள்ளது.

அத்தோடு இடம்பெற்ற விபத்தில் ஆட்டோச் சாரதி உட்பட அதில் பயணித்த மூன்று பேருக்கு படுகாயங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெலிக்கடை சிறைக்குள் மதூஷ் குழுவினர் மோதல்

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் வர்த்தகரான மாகந்துரே மதூஷ், ஊருஜு°வா என்பவரின் குழுக்களிடையே மோதலொன்று ஏற்பட்டது.

இதன்போது மதூஷ் குழுவைச் சேர்ந்த ஒருவர் மற்றைய குழுவைச் சேர்ந்த கைதி ஒருவர் மீது ஊசியேற்றும் சிலிஞ்சர் மூலம் தாக்கியதாகவும் தெரிய வந்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகமே மேற்படி மோதலுக்கு காரணம் எனவும் தற்போது இருவரும் வேறுபட்ட சிறைச்சாலைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டனர். (ஐ)

# மத்திய கிழக்கில் வேலைவாய்ப்புக்காக இலங்கையிலிருந்து 40 வீதமான பெண்கள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிக்கை

(கொழும்பு)

மத்திய கிழக்கில் வேலைவாய்ப்புக்காக் ஆண்களுடன் ஒப்பிடுகையில் 40 வீதமான பெண்கள் சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களாக 2019இல் மாத்திரம் 80 ஆயிரத்து 998 பேர் சென்றுள்ளமை தரவுகளின் ஊடாக தெரியவந்துள்ளதாக குறித்த பணியகத்தின் பொது முகாமையாளர் ஜெகத் படுகெதர தெரிவித்தார்.

அத்துடன், கடந்த வருடத்தில் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 143 பேர் வரையில் வேலைவாய்ப்பிற்காக வெளிநாட்டுக்குச் சென்றுள்ள நிலையில் மொத்தமாக 2 இலட்சத்து 3 ஆயிரத்து 141 பேர் வரை வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றனர்.

அவர்களில் அதிகமான பெண்கள் குவைத் நாட்டிற்கு தொழில் நிமித்தம் சென்றுள்ளதுடன், அவ்வாறாக 30 ஆயிரத்து 31 பேர் வரையில் குவைத்தில் உள்ளனர். அதேபோல், அதிகளவிலான ஆண்கள் கட்டார் நாட்டிற்குச் சென்றுள்ளதுடன் 36 ஆயிரத்து 161 பேர் ஏற்கனவே கட்டாரில் வேலையில் உள்ளனர்.

கடந்த வருடத்தில் பொதுவாக 9 ஆயிரத்து 41 பேர் வெளிநாடு சென்றுள்ளதுடன், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் 62 ஆயிரத்து 687 பேர் வெளி நாட்டில் உள்ளனர் என்றும் முழுமையாகப் பயிற்சி பெறாத 9 ஆயிரத்து 478 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவர்களில், எழுதுவினைஞர் தொழிலுடன் தொடர்புடைய தொழில்களுக்காக 9ஆயிரத்து 155 பேரும் பணிப்பெண்களாக 61 ஆயிரத்து 603 பேரும் பயிற்சி பெறாத தொழிலாளர்களாக 51 ஆயிரத்து 177 பேரும் வெளிநாடு சென்றுள்ளனர்.

அதேவேளை, 2018ஆம்ஆண்டில் மொத்தமாக 2 இலட்சத்து 11 ஆயிரத்து 229 தொழிலாளர்கள் வெளிநாடு சென்றுள்ளதுடன், அதில், 81 ஆயிரத்து 511 பேர் பெண்களும் ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 718 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில், கடந்த வருடம் வெளிநாடு சென்ற தொழிலாளர்கள் தொடர்பாக 3 ஆயிரத்து 494 முறைப்பாடுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவற்றுள் 2 ஆயிரத்து 616 முறைப்பாடுகளுக்கு தீர்வும் பெற்றுக் கொடுக்கப்பட்டதாக பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# மூவின மக்களும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் ஜனாதிபதி கோட்டாபய விருப்பம்

## திஸ்ஸ சுட்டிக்காட்டு





(கொழும்பு)

இந்த நாட்டில் வாழ்கின்ற மூவின மக்களும் மிகச் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதே எமது ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷவின் அபிலாஷை. அத்தோடு இந்த நாட்டை ஒரு சுபீட்சமான நாடாக மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணக்கருவோடும் இருக்கின்றார்" என வடமத்திய மாகாண ஆளுநர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

வட மத்திய மாகாண ஆளுநர் திஸ்ஸ விதாரண திருகோணமலை மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்தார்.

இதன் போது மூதூர் பிரதேசத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட வட மத்திய மாகாண ஆளுநர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மகளிர் அணியின் மூதூர் பிரதேசத்திற்கான தலைவி மஹ்றூப் - ரைஸாவின் தலைமையில் அவரது இல்லத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந் நிகழ்வில் ஆளுநர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் சிறுபான்மையினரின் ஆதரவு எமக்கு மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றதாகத் தெரிவித்ததுடன் இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு ஏமாற்றுபவர்களுக்கு பின்னால் நீங்கள் சென்றால் அமெரிக்காவின் கயிற்றை விழுங்க வேண்டிய நிலைவரும்.

எனவே நீங்கள் எதிர்வருகின்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவோடு இணைந்து பொதுஜன பெரமுனவில் கேட்கின்ற உங்களுடைய உறுப்பினர்களை தெரிவு செய்ய நாட்டில் உள்ள அபிவிருத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# சுதந்திர தின ஒத்திகைகளை முன்னிட்டு கொழும்பு வீதிகளுக்கு பூட்டு

(கொழும்பு)

சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு பாதுகாப்புப் படையினரின் ஒத்திகைகள் இன்று திங்கட்கிழமையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் பெப்ரவரி மாதம் 2, 3 ஆம் திகதிகளிலும் சுதந்திர சதுக்கத்தில் இடம் பெறவுள்ளன.

இதனால் குறித்த தினங்களில் காலை 6 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை வீதி மூடப்படுவதுடன் வாகனப் போக்குவரத்தும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எனினும் பிரதேச வாசிகளுக்கு மாத்திரம் வீதியைப் பயன்படுத்தும் வகையில் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கிலாஸ் ஹவுஸ் சந்தியிலிருந்து நந்தா மோட்டஸ் நுழைவாயில் பகுதியில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் நூலகச் சந்தியிலிருந்து கிலாஸ் ஹவுஸ் மற்றும் ஆனந்த குமாரசாமி மாவத்தை நுழைவாயில் பகுதியிலும் வாகனப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் காலி வீதியினூடாக கொள்ளுப்பிட்டி பகுதிக்கு வரும் வாகனங்கள் லிபர்ட்டி சுற்று வட்டம், தர்மபால மாவத்தை; பித்தல சந்தி , செஞ்சிலுவைச் சந்தி, லிப்டன் சுற்றுவட்டம் ஊடாகவும் எவலொக் வீதியையும், தும்முல்ல பகுதியினூடாக வரும் வாகனங்கள் தர்ஸ்டன் வீதி, மஃவீதி (அர்னஸ்ட் தி சில்வா மாவத்தை) மல்பார சந்தி , பித்தல சந்தியினூடான வீதியையும் பயன்படுத்த முடியும் எனவும் அறிவிக்கப்பட்டது. (ஐ)

# ஏழு பேரின் விடுதலைக்கான ஒப்புதலை தமிழக அரசு உடனடியாகப் பெற வேண்டும்

## ஸ்ராலின் வலியுறுத்து



(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் ஏழு பேரின் விடுதலைக்கான ஒப்புதலை தமிழக அரசு உடனடியாகப் பெற வேண்டும் என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ராலின் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் கடந்த வியாழக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்த அவர், "பேரறிவாளன் விடுதலை தொடர்பாக அரசியல் சட்டப் பிரிவு 161 இன் கீழ் தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்துப் பதிலளிக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது' வரவேற்கத்தக்கது.




29 வருடங்களுக்கும்மேலாகச் சிறையில் வாடும் ஏழு பேரின் விடுதலையில் புதிய திருப்பமாக உச்சநீதிமன்றமே தலையிட்டிருப்பதால், ஆக்கபூர்வமான விளைவை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை மனதில் தோன்றி மகிழ்ச்சி தருகிறது.

உச்சநீதிமன்றம் தற்போது பிறப்பித்துள்ள உத்தரவை தக்கபடி பயன்படுத்திக் கொண்டு அமைச்சரவை நிறைவேற்றிய தீர்மானம், அதனை ஆளுநர் எத்தனை மாதங்களாகக் கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார்,

ஆளுநர் அலுவலகத்திற்கு இந்தத் தீர்மானத்திற்கு ஒப்புதல் வழங்கக்கோரி அமைச்சரவை எடுத்த தொடர் நடவடிக்கைகள் என்ன என்பது குறித்த முழு விபரங்களையும் உச்சநீதி மன்றத்திற்குத் தாமதமின்றி தெரிவித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# இனவாதச் சிந்தனை கொண்ட கட்சிகள் அரசில் இணைத்துக் கொள்ளப்படமாட்டாது

## அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு



(ஏறாவூர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் றிசாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகள் இனவாதச் சிந்தனையுடன் செயற்படுவதால் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் அரசாங்கத்தில் அக்கட்சிகள் இணைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

மேலும் தலைவர்கள் ஊடாக அன்றி நேரடியாக மக்கள் மத்தியில் சென்று அவர்களுக்கு சேவை செய்ய அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் றிசாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகள் இனவாதச் சிந்தனை கொண்ட கட்சிகளாக உள்ளன.

அவர்கள் இனவாதச் சிந்தனையுடனேயே தொடர்ந்தும் செயற்படுவார்கள் என கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கிய பல கட்சிகள் கருதுகின்றன. எனவே எதிர்வரும் பொதுத்தேர்தலை தொடர்ந்து அமைக்கப்படும் புதிய அரசாங்கத்தில் அக்கட்சிகள் எவ்வகையிலும் இணைத்துக் கொள்ளப்படமாட்டாது.

எனவே தலைவர்கள் இன்றி நேரடியாக மக்களுடன் செயற்படவே நாம் விரும்புகின்றோம். பொதுமக்கள் இனவாதச் சிந்தனை கொண்டவர்கள் அல்ல. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எப்பொழுதும் இனவாதமாகச் செயற்பட மாட்டார்கள் என்றே நான் நம்புகின்றேன்.

இருப்பினும் மக்களின் வாக்கைப் பெறுவதற்காக இனவாத அரசியல் தலைவர்கள் மக்களையும் இனவாத பக்கத்திற்கு திசை திருப்புகின்றனர்.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் இனவாத ரீதியில் மக்களை தம்வசப்படுத்த முயற்சிக்கின்றனர்.

எனவே மக்கள் புத்திசாதுர்யமாக சிந்தித்து செயற்பட வேண்டும். அரசாங்கத்தின் அமைச்சர்கள் என்ற வகையில் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்கும் எதிர்வரும் காலத்தில் மேலும் பல சேவைகளை முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பாதுகாப்பான தேசம்- சுபீட்சமான நாடு தொனிப்பொருளில் இம்முறை தேசிய சுதந்திரதினக் கொண்டாட்டங்கள்

## பிரதம விருந்தினர்களாக ஜனாதிபதி மற்றும் பிரதமர்



(கொழும்பு)

"பாதுகாப்பான தேசம் - சுபீட்சமான நாடு" என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள 72 ஆவது தேசிய சுதந்திர தினத்திற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக, அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாரச்சி தேசிய சுதந்திர தின வைபவம் குறித்து தெரிவிக்கையில், தேசிய சுதந்திர தினத்தை குறைந்த வருமானங்களைக் கொண்டவர்களுக்கான ஊக்குவிப்பு மற்றும் கம்பீரமான தேசிய தின வைபவமாக நடத்துவதே ஜனாதிபதியினதும் பிரதமரினதும் நோக்கம் எனத் தெரிவித்தார்.



கொழும்பு 7 சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ள வைபவத்திற்காக முப்படை மரியாதை அணிவகுப்பு, கலாசார நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை இதில் இடம் பெறும். "விரு-ஜன"பதனம என்ற அமைப்புக்கு இம்முறை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினர்களாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் கலந்து சிறப்பிக்கவுள் ளனர்.

மகாசங்கத்தினரின் தலைமையில் அமைச்சர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள், தூதுவர்கள் அடங்கலாக சுமார் 5 ஆயிரம் பேர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். பொது மக்களுக்கும் இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.2004 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் தேசிய தின வைபவம் இம்முறை நடைபெறுகின்றமை விசேட அம்சமாகும். (ஐ)

# சமூக வலைத்தளங்களில் வெளியாகும் அவதூறுகளை தடுக்க புதிய சட்டம்

## பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் இணைய வழிப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் தேசிய இணைய வெளிப் பாதுகாப்பு மூலோபாயத்தின் கீழ் உருவாக்கப்படவுள்ள புதிய சட்ட வரைபொன்றினைப் பாதுகாப்பு அமைச்சு விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் சமூக வலைத்தளங்களில் அவதூறான பதிவுகள் மற்றும் கருத்துக்கள் வெளியிடுவதைத் தடுப்பதற்கு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதுடன் வெறுப்புணர்வைப் பரப்பும் வகையில் இன, மத ரீதியாக அமைந்த பதிவுகளை உடனடியாக அகற்றும் பொறிமுறையையும் பாதுகாப்பு அமைச்சு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இணைய பாதுகாப்புத் தொடர்பாக இலங்கைக் கணனி அவசர தயார் நிலைக் குழு உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின் போதே மேற்குறித்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதுபாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளதாவது;

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் இணைய வழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் தேசிய இணைய வழிப் பாதுகாப்பு மூலோபாயத்தின் கீழ் உருவாக்கப்படவுள்ள புதிய சட்ட வரைபானது விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இணைய வெளி பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் நிகழ்வுகளைத் திறம்பட நிர்வகித்தல் மற்றும் முக்கிய தகவல் உட்கட்டமைப்பை பாதுகாத்தல் போன்ற விரிவான கட்டமைப்பை நிறுவும் உத்தேச இணைய வெளி பாதுகாப்புச் சட்ட நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்யுமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன இலங்கை கணனி அவசரத் தயார் நிலைக் குழு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இதன் போது இணையப் பாதுகாப்பு தொடர்பான சட்ட மூலம் இறுதி சட்ட தெளிவுபடுத்தல்களுக்காக சட்ட வரைஞரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக மேற்படி குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இணையக் குற்றங்களில் கடனட்டை மோசடி, பழிவாங்குதல், ஆபாசம், சொத்துகளுக்கெதிரான குற்றங்கள் ,ஹேக்கிங் மற்றும் புலமைச் சொத்து திருட்டு போன்ற தனிநபர்களுக்கு எதிரான குற்றங்களும் இணைய வெளி பயங்கரவாதம், இணையத் தளங்களை ஹேக் செய்தல், அங்கீகாரமற்ற தகவல்களை செயலாக்குதல் மற்றும் முக்கியமான நிதி தர்வை ஹேக் செய்தல் போன்ற அரசாங்கத்திற்கும் பிற அமைப்புக்களுக்கும் எதிரான குற்றங்கள் அடங்கும்.

பிரபலமான சமூக ஊடகத் தளங்களை பயன்படுத்தி வெறுப்புணர்வு பேச்சு பரவாமல் தடுக்க புதிய வழிமுறையை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை மேற்படி கலந்துரையாடலின் போது மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன சுட்டிக் காட்டினார்.

இலங்கைகணனிஅவசரதயார் நிலை குழுவானது இணைய வெளி பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளில் தேசிய அளவிலான மைப்புள்ளியாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனம் ஆகும்.

புதிதாக தயாரிக்கப்பட்டுவரும் பொறிமுறையின் கீழ் நாட்டில் உள்ள இணையப் பாதுகாப்பு தொடர்பான அனைத்து விவகாரங்களுக்கும் ஒரு உச்ச அமைப்பாக டிஜிற்றல் உட்கட்டமைப்பு பாதுகாப்பு நிறுவனம் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் தேசிய தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு மூலோபாய அமுல்படுத்தலின் முக்கியத்துவத்தை டிஜிற்றல் உட்கட்டமைப்பு பாதுகாப்பு நிறுவனம் கட்டாயப்படுத்தியுள்ளது.

இலங்கையின் முறையான சட்ட மற்றும்கண்காணிப்புமுறைமை இல்லாததால் தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களுக்கு எதிரான இணையக் குற்றங்கள்(சைபர் கிரைம்கள்) வேகமாக அதிகரித்து வருவதாகவும் அதனால் அந்தக் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த முடியாதுள்ளதாக இலங்கை கணனி அவசர தயார் நிலை குழுவினர் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு தெரிவித்தனர். (ஐ)

# மகிந்தவுக்கு கறுப்புப் பட்டி



(பியாங்யாங்)

கொரியத் தற்காப்புக் கலையின் கறுப்புப்பட்டி விருது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலகப் புகழ்பெற்ற கொரிய தற்காப்புக் கலையான டேக்வாண்டோ (Taekwondo) சம்மேளனத்தின கறுப்புப்பட்டி விருது நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டது.

சம்மேளனத்தின் நிக ழ்வு ஒன்றில் இந்த கறுப்புப்பட்டி விருது பிரதமருக்கு வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ)



கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியின் மூன்றாம் வருட உள்ளகப்பயிற்சி மாணவர்களும் வலி.கிழக்கு பிரதேச சபையினர்களும் இணைந்து முன்னெடுத்த சிரமதானம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

# சுற்றுலா சபை பணியகத்தின் புதிய உறுப்பினர் நியமனம்



(திருமலை)

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலா சபை பணியகத்தின் புதிய உறுப்பினராகவும் முகாமைத்துவப் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும் ஹரிபிரதாப் நியமிக்கப்பட்டார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்னால் நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான போக்குவரத்து முகாமையாளரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புஸ்ஸலாவையில் பாரிய தீ விபத்து




(புஸ்ஸலாவ)

புஸ்ஸலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புஸ்ஸலாவ பகுதியில் நேற்று முன்தினம் மாலை திடீர் தீ விபத்தில் அச்சகம் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது.

இத் தீவிபத்தில் எவருக்கும் உயிராபத்தோ. காயங்களோ ஏற்படவில்லை என்றும் பொருட்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேச பொது மக்கள். இளைஞர்கள் ஆகியோர் இணைந்து ஏனைய கடைகளுக்கு தீ பரவாமல் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் பொருட்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

தீப் பரவல் ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும் மின்சார ஒழுக்கு காரணமாக இத் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

ஏற்பட்ட தீப் பரவல் காரணம் தொடர்பாகவும், சேதவிபரங்கள் தொடர்பாகவும் புஸ்ஸலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1958

## லக்சனா

வாழ்க்கையில வளர்ச்சியிருக்கோ இல்லையோ



தொப்பையில மட்டும் வளர்ச்சி இருக்குது.

## சசி




## துசி

ஜோசியர்: நீ காதலிக்குற பையனே உனக்கு கணவனாய் அமைவான்



பெண்: குறிப்பா யாருன்னு சொல்லாம இப்படி பொதுவா சொன்னா எப்படி!!

## விஜி

டாக்டர்: ஆபேரஷன் முடிந்து நீங்க நடந்தே வீட்டுக்குப் போகலாம்



நோயாளி: ஆட்டோவுக்குக் கூடக் காசு இருக்காதா டாக்டர்?

## பிரசன்னா

டேய் ஏன்டா கடைக்காரன் மண்டையை உடைச்சே??



அப்பாதான் சொன்னாரு டார்ச்லைட் வாங்கும் போது அடிச்சு பாத்து வாங்கச்சொல்லி அதான்

## பிரகர்ஷா



நாட்டுக்கு எப்படி வரி முக்கியமோ, அதுமாதிரி ஞாயிற்றுக்கிழமை கறி முக்கியம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மைத்திரியின் ஆட்சியில் பொலநறுவை அபிவிருத்திக்கு 25.29 பில்லியன் செலவீடு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக் காலத்தில் பொலநறுவை மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளிற்காக 25.293 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிதியுதவியுடனான திட்டங்கள் தவிர்த்து. பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நேரடி அரசாங்க செலவீனமாக இந்த நிதி பயன்படுத்தப்பட்டது.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தைப் பயன்படுத்தி இந்த விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

2015 ஜனவரி 8ஆம் திகதி முதல் 2019 நவம்பர் 16ஆம் திகதி வரை இந்த நிதி செலவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகம் வழங்கிய தகவல்களின்படி. 2015 ஜனவரியில் முன்னாள் ஜனாதிபதி பதவியேற்ற உடனேயே எடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவைத் தொடர்ந்து ஐந்தாண்டு கால வேலைத்திட்டமான 'பிபிதெமு பொலநறுவ அபிவிருத்தித் திட்டம் வேகமாக செயற்படுத்தப்பட்டது.

பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி சிறிசேன. அபிவிருத்தித் திட்டத்தின் முழு அமுலாக்க செயல்முறையையும் அவ்வப்போது கூட்டங்களை நடத்துவதன் மூலமும், தனிப்பட்ட கடிதங்கள் மற்றும் சிரேஷ்டஅரசாங்க அதிகாரிகளிடம் கோரிக்கைகளை நடத்துவதன் மூலமும் தற்போதைய திட்டங்களின் நிலை குறித்து மேற்பார்வையிட்டார். இது 2015 முதல் 2019 வரை ஜனாதிபதி செயலகத்தின் செயற்றிறன் அறிக்கைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

2015 ஆம் ஆண்டில். 152 திட்டங்களுக்கு 4 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது. பாடசாலை அபிவிருத்திப் பணிகள், பாடசாலைகளுக்கான சுகாதார வசதிகள். விகாரைகள் மற்றும் வைத்தியசாலைகளின் வளர்ச்சி மற்றும் வனவிலங்குகள். காடுகள் மற்றும் வீதிப் பாதுகாப்பு என பல்வேறு திட்டங்களிற்காக நிதி பயன்படுத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டில். அங்கீகரிக்கப்பட்ட 908 திட்டங்களில். 618 பணிகள் நிறைவடைந்தன. 5.63 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2017 இல் 2ஆயிரத்து 338 அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் ஆயிரத்து 781 திட்டங்கள் முழுமையாகச் செயற்படுத்தப்பட்டன.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில். 20 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட நிதியில். 15.663 பில்லியன் ரூபாவிலான 6ஆயிரத்து 765 திட்டங்களை அமைச்சுகள். மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகள் மூலம் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் மேற்கொள்ள செலவிடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவின் உத்தியோகபூர்வ மற்றும் அதிகாரப்பூர்வமற்ற வருகைகளுக்காக அவரது ஐந்தாண்டு காலப்பகுதியில் செலவிடப்பட்ட நிதி விபரங்கள் ஜனாதிபதி செயலகத்தில் கிடைக்கவில்லை என்று தகவல் அறியும் கேள்விக்கு செயலகம் அனுப்பிய பதிலில் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட இந்த உத்தியோகபூர்வ வருகைகள் தொடர்பாக ஏதேனும் கொடுப்பனவுகள் நிலுவையில் உள்ளதா என்ற மற்றொரு கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி செயலகம். நிலுவையில் உள்ள கொடுப்பனவுகள் எதுவும் இல்லை அல்லது திறைசேரி அல்லது வேறு எந்த நிறுவனமும் நிலுவையில் உள்ள கொடுப்பனவுகள் குறித்து தெரிவிக்கப்படவில்லை என மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## இராணுவப் பாதுகாப்புடன்

# தேயிலைக் கொழுந்து பறிக்கும் போட்டி





(கண்டி)

பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் தாங்கள் செய்கின்ற தொழிலைப் பாதுகாத்து அதனை மேம்படுத்தும் முகமாகவும் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் தேயிலைக் கொழுந்து பறிக்கும் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நாவுல்யா ரதல்ல தோட்டத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஹேலிஸ் கம்பனிக்கு சொந்தமான தோட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட 39 போட்டியாளர்கள் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதலாம் இடத்தைப் பெற்றுக் கொள்ளும் போட்டியாளருக்கு குடும்பத்துடன் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கும் இரண்டாம் போட்டியாளருக்கு இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவும் மூன்றாம் இடத்தினை பெறுபவருக்கு 40 ஆயிரம் ரூபாய் பரிசும் வழங்கப்படவுள்ளது. இப்போட்டி நிகழ்ச்சிக்கு இராணுவ. பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறு நெல் ஆலையாளர்களை பலப்படுத்த பல்வேறு திட்டங்கள்

## சந்திரசேன தெரிவிப்பு

(கொழும்பு)

சிறு நெல் ஆலையாளர்களை பலப்படுத்துவதற்காக நடைமுறை அரசாங்கம் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தி வருவதாக அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் உள்ள நெல் களஞ்சியசாலைகளை நேற்று முன்தினம் கண்காணித்த அமைச்சர் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெல்லைக் கொள்வனவு செய்யும் அனைத்து உரிமைகளும் தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகவே ஆலை உரிமையாளர்களை ஊக்குவிக்க கடன் வசதிகளை வழங்க உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# செய்தித்துளிகள்

## மோ.சைக்கிள் விபத்தில் முதியவர் பலி

(கொழும்பு)

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியின் பண்டாரவத்த பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதி ஒருவர் உயிரிழந்தார்.மோட்டார் சைக்கிள் ஒன்றும் கப் வாகனம் ஒன்றும் மோதியே இந்த விபத்து நேற்று முன்தினம் ஏற்பட்டது.

விபத்தில் படுகாயமடைந்த 75 வயதுடைய மோட்டார் சைக்கிளின் சாரதி சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கப் வாகனத்தின் சாரதியை கைதுசெய்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் படுகொலை

(கொழும்பு)

வீரகெடிய-கிங்சிதுகே பகுதியில் கூரிய ஆயுதமொன்றால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். சம்பவத்தில் பலியானவர் அதே பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்திற்கு பழைய தகராறே காரணமென ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## ஹெரோயினுடன் இருவர் கைது

(கொழும்பு)

கலேன்பிந்தட்டுவெவ -துடுவெவ பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரு சந்தேக நபர்களை பொலிஸார் நேற்று கைது செய்தனர். குறித்த சந்தேக நபர்களிடமிருந்து 35 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது. சந்தேக நபர்கள் மாவத்தகம துடுவெவ பகுதியைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ரயிலில் மோதி இளைஞன் பலி

(பொல்கஹவெல)

பொல்கஹவெல ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலில் மோதுண்டு இளைஞன் ஒருவன் உயிரிழந்தான்.

18 வயதான பம்பரகஸ்வெல பகுதியைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு உயிரிழந்தான்.

சடலம் குருநாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொல்கஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 250 | 300 |
| தக்காளி | 250 | 280 | 160 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 |
| கோவா | 160 | 140 | 120 | 160 |
| கரட் | 380 | 400 | 240 | 500 |
| பூசணி | 80 | 100 | 100 | 160 |
| புடோல் | 120 | 180 | 110 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 280 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 120 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 160 | 220 | 90 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 150 | 200 | 170 | 200 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 100 | 180 | 200 | 120 |
| கறிமிளகாய் | 250 | 280 | 220 | 320 |
| முருங்கைக்காய் | 800 | 1200 | 550 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 200 |
| [illegible] | 80 | 60 | 70 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 55 | 40-60 |
| இராசவள்ளி | 190 | 200 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 240 | 220 | 280 |
| [illegible] | 50 | 140 | 80 | 100 |
| [illegible] | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 40 |
| [illegible] | 80 | — | 120 | 120 |

# சிறுவர் அரங்கம்

## நன்றிமறந்த சிங்கம்



முல்லை மலர் என்ற காட்டில் விறகு வெட்டுவதற்காக சென்று கொண்டிருந்தான் மனிதன் ஒருவன்.

அப்போது காட்டில் எங்கிருந்தோ சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. பயத்துடன் ஓடத் தொடங்கினான் மனிதன்.

"மனிதனே பயப்படாதே! இங்கே வா! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்" என்ற குரல் கேட்டது.

தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான் மனிதன்.

அங்கு ஒரு கூண்டில் சிங்கம் அடைப்பட்டு இருந்தது. வேட்டைக்காரர்கள் சிலர் சிங்கத்தை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூண்டு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந்தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட சிங்கம் கூண்டிற்குள் மாட்டிக் கொண்டது.

மனிதனைப் பார்த்த சிங்கம், "மனிதனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடு... நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன்" என்றது.

"நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன். உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்?" என்றான் மனிதன்.

"மனிதர்களைக் கொல்லும் சுபாவம் எங்களுக்கு உண்டு தான். அதற்காக உயிர்காக்கும் உன்னைக் கூடவா அடித்துக் கொன்று விடுவேன். அவ்வளவு நன்றியில்லாதவனா நான்? பயப்படாமல் கூண்டின் கதவைத் திற. உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்" என்று நைசாகப் பேசியது சிங்கம்.

சிங்கத்தின் வார்த்தையை உண்மையென்று நம்பிவிட்டான் மனிதன். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்! நன்றி கெட்ட சிங்கம் மனிதன் மேல் பாய்வதற்கு தயாராயிற்று.

இதனைக் கண்ட மனிதன், "சிங்கமே, நீ செய்வது உனக்கே நியாயமா? உன் பேச்சை நம்பி உன்னைக் கூண்டிலிருந்து விடுவித்தேனே... அதற்கு இதுதானா நீ காட்டும் நன்றி" என்றான்.

"என் உயிரைக் காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் பொய் சொல்லுவேன். அதை நீ எவ்வாறு நம்பலாம்? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் என்று தானே பொருள்.

அந்த அறிவைக் கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று பகுதித்தறிய வேண்டாமா? முட்டாள் தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?" என்றது சிங்கம்.

"கடவுள் உன்னை தண்டிப்பார். உன் உயிரை காப்பாற்றிய என்னையே சாப்பிடுவது நியாயமா? உன்னை விடுவித்ததற்கு இம்மாதிரி நடந்து கொள்வது முறையல்ல" என்றான் மனிதன்.

அப்போது அவ்வழியாக ஒரு நரி வந்தது.

"இதனிடம் நியாயம் கேட்போம்" என்று கூறிய மனிதன் நடந்த கதையனைத்தையும் நரியிடம் கூறினான்.

"எங்கள் தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான். இது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட என்னைக் கூண்டிலிருந்து விடுவித்தான். முட்டாள்தனமான இந்தச் செய்கைக்கு உரிய பலனை இவன் அனுபவித்தே தீர வேண்டும். நீ என்ன சொல்ற நரியாரே..." என்றது.

அனைத்தையும் கேட்ட நரிக்கு சிங்கத்தின் நன்றி கெட்ட செயல் புரிந்துவிட்டது. உதவி செய்த மனிதனைக் காப்பாற்றி சிங்கத்தை கூட்டில் பூட்டிவிட தந்திரமாக செயற்பட்டது.

அதனால் ஒன்றும் புரியாததைப் போல் பாவனை செய்து."நீங்கள் இந்த மாதிரி சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியல. ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள்" என்றது நரி.

உடனே சிங்கம் சொல்லத் தொடங்கியது.

"நான் அந்தக் கூண்டிற்குள் அடைந்து கிடந்தேன்..."

"எந்தக் கூண்டிற்குள்?" என்றது நரி.

"அதோ இருக்கிறதே அந்தக் கூண்டிற்குள்" என்றது சிங்கம்.

"எப்படி அடைந்து கிடந்தீர்கள்?" என்றது நரி.

சிங்கம் விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது. இது தான் சமயம் என்று கருதிய நரி சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடியது.

"நரியாரே! இது என்ன அயோக்கியத்தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூண்டில் அடைத்துவிட்டீரே!" என்று கத்தியது சிங்கம்.

"நீங்கள் பேசாமல் கூண்டிற்குள்ளேயே இருங்கள். நான் ஒன்றும் இந்த மனிதனைப் போல் முட்டாள் அல்ல. உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் மனிதனை அடித்துக் கொல்வீர்கள்.

பிறகு என்னையே அடித்துக் கொன்று விடுவீர்கள். அதனால் தான் உங்களைக் கூண்டிற்குள் செல்லுமாறு செய்து கதவைப் பூட்டிவிட்டேன்" என்றது நரி.


நன்றி மறந்த சிங்கம் தான் செய்த தவறை எண்ணி வருந்தியது.

**நீதி: ஒருவர் செய்த உதவியை எப்போதும் மறக்கக் கூடாது.**

## பழமொழிகள்

- படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன் கோயில்.
- படைக்கும் ஒருவன் கொடைக்கும் ஒருவன்.
- படை முகத்திலும் அறிமுகம் வேண்டும்.
- பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.
- பணம் பத்தும் செய்யும்.
- பந்திக்கு முந்து படைக்குப் பிந்து.
- பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.
- பணக்காரன் பின்னும் பத்துப்பேர். பைத்தியக்காரன் பின்னும் பத்துபேர்.
- பணத்தைக் கண்டால் பிணமும் வாய் திறக்கும்.
- பணம் பந்தியிலே குணம் குப்பையிலே.
- பண்ணிய பயிரிலே புண்ணியம் தெரியும்.
- புலிக்குப் பிறந்தது பூனையாய்ப் போகுமா?
- புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்.
- பூ மலர்ந்து கெட்டது வாய் விரிந்து கெட்டது
- பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்.
- பூமியைப்போலப் பொறுமை வேண்டும்.
- பூனைக்கு கொண்டாட்டம். எலிக்குத் திண்டாட்டம்.
- பெண் என்றால் பேயும் இரங்கும்.
- பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்.
- பெருமாள் இருக்கிற வரையில் திருநாள் வரும்.

## உருவில் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



நாட்டிலுள்ள அறிஞர்களின் உள்ளங்களை நமக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடிகளே புத்தகம்.
~ டெவேர்ட் கிப்ரான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சைவ சமயத் தலைவர்களை போடு த்டியாக்கும் முயற்சிகள்

இலங்கையில் இருந்து சைவ சமயத்தை முற்றாக அழிப்பதற்கான அத்தனை முயற்சிகளும் நடந்தவண்ணமுள்ளன.

எனினும் இந்த உண்மையை நம் சைவ சமயத் தலைவர்கள் உணர்வதாக இல்லை.

மாறாக சைவ சமயத் தலைவர்களையும் உள்ளடக்கி அமைப்புக்களை உருவாக்குவது போல காட்டிக் கொண்டு ஏனைய சமயங்கள், தங்கள் வேலையைச் செய்கின்றன.

இதற்கு சர்வமதப் பேரவை நல்லதொரு உதாரணமாகும்.

சைவ சமயத் தலைவர்களையும் உள்ளடக்கியதாக சர்வமதப் பேரவையை அமைத்துக் கொண்டு, சர்வமதப் பேரவைக் கூட்டங்களில் பௌத்த துறவிகளுக்கு வெள்ளை விரித்து ஆசனம் போட்டு முதன்மைப்படுத்தி விட்டு, சைவ சமயத் தலைவர்களுக்கு வெற்று நாற்காலி கொடுக்கின்ற நடைமுறையே இங்கு உள்ளது.

சுருங்கக்கூறின் சைவ சமயத் தலைவர்களைப் போடு தடிகளாக்கி தத்தம் சமயத்தை வளர்க்கின்ற செயற்பாடுகள் மிகத் தீவிரமாக உள்ளன.

எனினும் இதனை நம் சமயத் தலைவர்கள் உணர்ந்து கொள்வதாக இல்லை.

எந்த அமைப்பை யார் உருவாக்கினாலும் அதில் அங்கம் பெறுவதற்கு சம்மதிக்கின்ற சைவ சமயத் தலைவர்களின் நல்ல குணம் ஏனைய சமயத் தலைவர்களுக்கு மிகச் சாதகமாக அமைந்து விடுகிறது.

இதனால் சைவ சமயத்துக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமெனக் குரல் கொடுப்பவர்கள் தோற்றுப் போவதைத் தவிர, வேறு எந்த விமோசனமும் இல்லை என்பதாகி விடுகிறது.

இது தவிர, தமிழ் அரசியலில் சைவ சமயத்தவர்கள் முதன்மை பெறுவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளும் நடந்த வண்ணமுள்ளன.

இதன் பிரதிபலிப்புகள் மிக விரைவில் தெரியவரும் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எனவே யார் எந்த அமைப்பை உருவாக்கினாலும் அதில் இடம்பெறுவதற்குச் சம்மதம் தெரிவிப்பதற்கு முன்னதாக, அந்த அமைப்பின் நோக்கம் என்ன? அதன் பின்னணி என்ன? என்பன பற்றியெல்லாம் கேட்டு; தக்க முறையில் அறிந்த பின்பே சைவ சமயத் தலைவர்கள் தங்களின் சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும்.

இவற்றுக்கு மேலாக, மன்னார் திருக்கேதீச்சர ஆலய நுழைவாயில் வளைவு மீளக் கட்டப்படாதவரையில், சைவ சமயத் தலைவர்கள் பிற சமயத் தலைவர்களை உள்ளடக்கிய தான அமைப்புக்களில் இடம்பெறுவதை முற்றாகத் தவிர்ப்பது நல்லது.

இதை நீங்கள் செய்யத் தவறினால், மன்னார் திருக்கேதீச்சர ஆலயமும் எதிர்காலத்தில் அடித்து உடைத்து காலால் மிதிக்கப்படலாம் என்பது புரிதற்குரியது.

# எனது தலைமையில் கூட்டணியமைத்து பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவோம்

### எதிர்க்கட்சித்தலைவர் சஜித்

(கொழும்பு)

புதிய கூட்டணி அமைத்துக்கொண்டு தேர்தலை வெற்றிபெறுவேரம் எனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச, அதற்கு தலைமைத்துவம் வழங்க தான் தயாராகவுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் அனைத்து முற்போக்கு சக்திகளையும் கூட்டிணைத்துக்கொண்டு புதிய கூட்டணி அமைத்துக் கொண்டு தேர்தலை வெற்றிபெறுவோம். அதற்காக கிராம மட்டத்தில் இருக்கும் நீங்கள் சக்தி பெறவேண்டும். பொதுத் தேர்தலுக்கு புதிய மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்த நாங்கள் தயார்.

அதற்காக யாரையும் ஒதுக்கமாட்டோம். அனைவரையும் இணைத்துக் கொண்டே செல்ல வேண்டும். புதிய கூட்டணிக்கு தலைமைதாங்க நான் தயார். ஒற்றுமையே எமக்கு பலம். அந்த ஒற்றுமை பெயரளவில் இருக்க முடியாது.

அதேபோன்று எமது எதிர்த்தரப்புடன் டீல் போட்டுக்கொண்டு செயற்படுபவர்களுடன் இந்த பயணத்தை செல்லமுடியாது. டீல் அரசியல் கட்சிக்கும் நல்லதில்லை, நாட்டுக்கும் நல்லதில்லை என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பு கண்காட்சி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

(ம-3)

### சாரதி அனுமதிப்பத்திரம் பெற

# வைத்திய பரிசோதனையை இணையத்தில் பதிவு செய்யலாம்

(கொழும்பு)

வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான வைத்திய பரிசோதனைக்கு இணையத்தள பதிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வைத்திய பரிசோதனைக்கான நாள் மற்றும் நேரத்தை இணையத்தளம் ஊடாக பதிவுசெய்வதற்கு இன்று (திங்கட்கிழமை) முதல் வசதிகள், ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இதற்கென அறிமுகப்படுத்தப்பட்ட இணையத்தள செயலி இன்று முதல் செயற்பாட்டுக்கு வரவுள்ளது.

கடந்த வெள்ளிக் கிழமை முதல் குறித்த இணையத்தள செயலி சோதனைக்குட்படுத்தப்பட்டது. அது வெற்றியளித்த நிலையில், இன்று காலை முதல் இணையத்தளத்தினூடாக வைத்திய சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக பதிவு செய்து கொள்ள முடியுமென தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதற்கான கையடகத் தொலைபேசி செயலி எதிர்வரும் இரு வாரங்களுக்குள் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான வைத்திய பரிசோதனைக்கான நாள் மற்றும் நேரத்தை பதிவு செய்வதற்கு www.ntmi.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசிக்குமாறு பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள் ளது. (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்ககங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** மூன்றுமுறிப்பிலிருந்து பூஓயா வரை, **Gowloom Garments,** ஈரப்பெரிய குளம் இராணுவ முகாம், **SLBC** ஈரப்பெரியகுளம்யோசப் படை முகாம், மூன்று முறிப்பு இராணுவ முகாம், **Air Point Joint Service Army Camp, BOO** ஓயா, **Recbo North,** மதவு வைத்தகுளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில** தரவன்கோட்டை, சாந்திபுரம், **South bar,** கடலேரி, தள்ளாடி, தள்ளாடி படை முகாம், மாந்தை உப்பு தொழிற்சாலை, ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# இல்லமெய்வல்லுநர் போட்டியும் கலை அரங்கத் திறப்பு விழாவும்

(சாவகச்சேரி)

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும், கலாநிதி க.செ.நடராசா கலை அரங்கத் திறப்பு விழாவும் நாளை 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.பாடசாலை அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழில் அதிபர் மகிழ்னன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-30)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**வெளிச்சத்தில் தனியாக நடப்பதை விட இருளில் ஒரு நண்பரின் துணையோடு நடப்பது சிறந்தது.**

**-ஹெலன் கெல்லர்**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## விழிப்பு நிலையின் மேன்மை



எல்லாம்வல்ல மெய்ப்பொருள் "பிரம்மம்" எழுச்சி பெற்று உலகமாக, உயிர்களாகப் பரிணாமத்தினால் காட்சியாகிறத் அப்படிக் காட்சியாகும் பிரம்மத்தின் தன்மையான அறிவு வெளிப்படுகிறது. சுத்த வெளியாகிய மெய்ப்பொருள், அணுவாக இயங்கி, உலகமாக, உயிர்களாக, உயிரின் அலையான அறிவாக மாறும் வரை பிரம்மத்தின் வேறு தன்மை வெளிப்படுவதற்குச் சந்தர்ப்பம் கிடையாது.

பிரம்ம வேறு, அறிவு வேறா என்றால் வேறில்லை இரண்டும் ஒன்று தான். அறிவை அறியும் ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டிருக்கும் நாம் "எங்கு இருக்கிறோம், எப்படி இருக்கிறோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம்" என்பதை உணர்ந்து எப்போதும் விழிப்பு நிலை கொண்டு பிறருக்குத் துன்பம் தராத செயல்களையே எந்தக் கணமும் செய்து கொண்டிருக்க வேண்டும்.

இந்த விழிப்புநிலை தான் மெய்ஞ்ஞானம் ஆகும். **(It is this State of constant awareness that is Wisdom).** இந்த விழிப்புநிலை வந்து விட்டதேயானால் நாம் பிறருடைய தவறுகளைக் குறையாக எண்ண மாட்டோம். அப்படிக் குறையாகவே இருந்தாலும் அதைச் சுட்டிக்காட்டாமல், "அவர்களுடைய அறிவு இவ்வளவு, அதற்கேற்ப அவர்கள் செயல்களாற்றி வருகிறார்கள். அதற்கு நாம் எந்த விதத்தில் உதவ முடியும்" என்று பார்த்து முன்வருவோம்.

இந்த உயர்ந்த நிலை வந்து விட்டதேயானால் நம்முடைய செயல்களில் குற்றம் இருக்காது நம்முடைய குற்றத்தைக் கண்டு நம்மைத் திருத்திக் கொண்டால் எப்போதும் நன்மையே செய்யும் தகைமை வந்துவிடும்.

# கரணவாய் கொலின்ஸ் அணியை வென்று சம்பியன் பட்டத்தை வென்றது விண்மீன்




பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் விண்மீன் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

விண்மீன் அணி சார்பாக விஜித் இரு கோல்களையும் கொலின்ஸ் அணி சார்பாக மணி. வனஜன் ஆகியோர் தலா ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக நிதுசனும் தொடராட்ட நாயகனாக விஜித்தும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# சாந்தையில் சிறப்புடன் நடைபெற்ற கைக்கொடி மாட்டுச் சவாரி போட்டி



சாந்தை ஸ்ரீ சிவசுப்பிரமணியம் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு வெண்கரம் அமைப்பின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கைக்கொடி மாட்டுச் சவாரி போட்டி கடந்த சனிக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றுள்ளது.

சாந்தை ஸ்ரீ சிவசுப்பிரமணியம் ஆலய தர்மகர்த்தா செ.தனுசன் தலைமையில் நடைபெற்ற பண்டத்தரிப்பு சாந்தை சவாரித்திடலில் பிற்பகல் 4 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய கைக்கொடி மாட்டுச் சவாரி போட்டியானது அ, ஆ, இ ஆகிய மூன்று பிரிவுகளில் நடத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியில் சிறப்பு பங்கேற்பாளர்களாக வெண்கரம் அமைப்பின் செயற்பாட்டாளர்களான மு.கோமகன், பி.பொன்ராசா, இரா.மயூதரன் மற்றும் வெண்கரம் அமைப்பின் சாந்தை-சில்லாலை படிப்பகத்தின் தலைமை செயற்பாட்டாளர் A.S.சந்திரன், வலி.தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர் த.தர்மகுலசிங்கம் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்திருந்ததுடன் போட்டிகளை நெறியாள்கை செய்திருந்தனர்.

ஊர்மக்கள் பலரும் வயது வேறுபாடின்றி ஆர்வமுடன் கலந்துகொண்டு பார்வையிட்டிருந்தனர்.

"அ" பிரிவில் முதலாமிடம் - சிந்துயன், இரண்டாமிடம் - சுவிஸ்திகா, மூன்றாமிடம் - வசந்தன் ஆகியோரும், "ஆ" பிரிவில் முதலாமிடம் - சுவிந், இரண்டாமிடம் - சிந்துஜன், மூன்றாமிடம் - வசந்தன் ஆகியோரும், "இ" பிரிவில் முதலாமிடம் -தினிஸ்ரன், இரண்டாமிடம் - வசந்தன், மூன்றாமிடம் - கனிஸ்ரன், நான்காமிடம் - அனிதராஜ் ஆகியோரும் பெற்றிருந்தனர். இவர்களுக்கான பரிசில்கள் ஆலய திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது வதிரி டயமன்ஸ் அணி



குப்பிழான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 03:02 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

டயமன்ஸ் அணி சார்பாக பிரேம்குமார் 02, நிதுஷன் ஒரு கோல்களையும் றேஞ்சர்ஸ் அணி சார்பாக ஆர்த்தி இரு கோல்களையும் பெற்றுக் கொடுத்தனர். (க)

# வேகநடைப் போட்டியில் ப.கோபிநாத் தங்கம்



யாழ்.மாவட்ட செயலகத்திற்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களிற்கான வேக நடைப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த சிறி அம்பாள் விளையாட்டுக் கழக வீரர் ப.கோபிநாத் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்திற்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான வேக நடைப் போட்டி யாழ்.துரையப்பா விளையாட்டு மைதான முன்றலில் ஆரம்பமாகியது.

ஆண்களிற்கான 10 கிலோமீற்றர் வேகநடைப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த, சிறி அம்பாள் விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ப.கோபிநாத் ஒரு மணித்தியாலம் 14.1 செக்கன்களில் நடந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (க)

# சுவிட்ஸர்லாந்து தேசிய உதைபந்தாட்ட அணியில் முதல் ஈழத்தமிழர் இணைப்பு



ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட பாலறாபன் அஸ்வின் தனது 18 ஆவது வயதிலேயே உதைபந்தாட்டம் ஆடுவதற்கான ஒப்பந்தம் பெற்றுள்ள முதல் தமிழன் ஆவார்.

உதைபந்தாட்ட வீரரின் மகனான பாலறாபன் அஸ்வின் லூர்சேன் மாநில அணியிலும், 21 வயதுப்பிரிவு சுவிஸ் தேசிய அணியிலும் இடம்பிடித்திருக்கிறார்.

பாலறாபன் அஸ்வின் தனது முதல் தொழில்முறை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார். அவரது ஒப்பந்தம் 2023 ஜூன் 30 வரை இயங்குகிறது.

எஃப்.சி. லூஸெர்ன் அணியிலிருந்து, சுவிட்ஸர்லாந்தில் தேசிய ரீதியான போட்டிகளுக்கு விளையாட தகுதி பெற்றிருக்கும் இருவரில் இவரும் ஒருவர்.

அத்துடன் இந்தப் போட்டிகளுக்கு தெரிவாகியிருக்கும் முதலாவது ஈழத்தமிழர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# உதைபந்தாட்டப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு, எமது கழகத்தின் மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் 09 நபர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வெகு விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

70 அணிகளுக்கு மேல் பங்குபற்றும் இத்தொடருக்கான போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் பா. பிரதீபன் (தலைவர்) : 077 580 1944, ஞா.ரசிகரன் (செயலாளர் : 077 796 9544, ச.சண்முகதாஸ் (பொருளாளர்) : 076 686 5737, க.அஜித் : 077 112 8358 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## கணவன் இறந்த...

கிழமை நோயின் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இந்நிலையில் கணவன் உயிரிழந்த செய்தியைக் கேள்வியுற்ற அவரது மனைவி ஐ.சரஸ்வதியும் (வயது - 72) நேற்றைய தினம் உயிரிழந்தார்.

கணவன், மனைவி உயிரிழந்த செய்தியால் அப்பகுதி பெரும் சோகத்தில் உறைந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,10,104)

## அரசியல் கைதி...

அந்நேரம் இவ் அரசியல் கைதிகள் மன்னார் பிரஜைகள் குழு பிரதிநிதிகளிடம் கருத்து தெரிவிக்கையில், அரசியல் பிரதிநிதிகள், அரசு சார்பற்ற பிரதிநிதிகள் யாவரும் எங்கள் விடுதலை கோரி ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்ற போதும் இதுவரைக்கும் சாதகமான செயற்பாடுகள் நடைபெறாது இருந்து வருகிறது.

எங்கள் விடுதலை கோரி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மதத் தலைவர்களும் முன்னெடுப்பார்களானால் பலன் கொடுக்கும் வாய்ப்புகள் ஏற்படலாம். பல வருடங்களாக நாங்கள் எவ்வித விசாரணைகளும் இன்றி சிறைசாலையில் வாடும்போது நாங்கள் மட்டும் இங்கு வேதனைகளை அனுபவிக்கவில்லை. மாறாக எங்கள் குடும்பங்களும் பெரும் வேதனைகளுக்கும் உள்ளாகி வருகின்றது.

ஜனாதிபதி பலருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதுபோல் எங்களுக்கும் இவ்வாறு செய்ய மதத்தலைவர்கள் தங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆகவேதான் மதத் தலைவர்களும் எங்கள் மட்டில் கருசனை கொள்ள வேண்டும் என தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-3,9)

## நாய்க்கடிக்கு...

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த அன்ரனி மாலதி (வயது - 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கோப்பாய் பகுதியில் வசித்து வரும் குறித்த குடும்ப பெண்ணிற்கு இரண்டு மாதத்திற்கு முன்னர் விசர் நாய் கடித்துள்ளது. அவ்வாறு கடித்த நாயை அயலவர்கள் அடித்து கொன்றுள்ளனர். விசர் நாய்க் கடிக்கு உள்ளான குறித்த பெண் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் மருந்து எடுத்ததுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு உடனடியாகவே சென்று தடுப்பு ஊசி போட்டுள்ளார்.

அங்கு வைத்தியசாலையில் மிகுதியாக இரண்டு ஊசிகள் போடவேண்டும் என்று கூறி திகதியும் குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். எனினும் ஊசி போட பயம் அடைந்த நிலையில் தடுப்பூசி போடாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்.

இந்நிலையில் இரண்டு நாட்களுக்கு முன் சுவாசப் பிரச்சினை ஏற்பட்டு கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அங்கு வைத்தியர்களிடம் தனக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு விசர் நாய் கடித்ததாகவும் மிகுதி தடுப்பூசி போடப்பட வேண்டிய போதிலும் தாம் அதனை பயத்தில் போடவில்லை என்றும் கூறியுள்ளார்.

உடனடியாக அவருக்கு அதற்கான சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இந்த இறப்பு தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.(ம-3.10)

## கோவிலில்...

குறித்த இளைஞர் அதே பகுதியில் அமைந்துள்ள கந்தசுவாமி கோவிலில் தொண்டு வேலைகள் செய்து வந்துள்ளார். இந்த நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்தை மீட்ட தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3.9)

## வடமராட்சி...

துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு முப்பது மணி அளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செபமாலை செபஸ்தியான் என்ற பருத்தித்துறை பிரதேச சபையின் பன்னிரண்டாம் வட்டார உறுப்பினரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3.60.100)

## வேகமாகப்...

இவை ஏற்படும் பட்சத்தில் வைத்திய பரிசோதனை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

வேகமாக பரவக்கூடிய இந்த புதிய கொரோனா பாதிப்பு ஏற்பட்டால் நிமோனியா காய்ச்சல் மற்றும் சிறுநீரக பாதிப்பு உள்ளிட்ட மோசமான நிலைமை ஏற்படக்கூடும். புதிய வைரஸின் தாக்கத்தை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாக சுகாதார அதிகாரிகள் பல ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.

கைகளை சவர்க்காரம் இட்டு கழுவுதல் அல்லது விசக்கிருமிகளை அழிக்கக்கூடிய பொருட்களை பயன்படுத்துதல், இருமல் மற்றும் தும்மலின்போது கைக்குட்டையை பயன்படுத்துதல், பயன்படுத்திய கைக்குட்டையை உரிய கழிவு தொட்டியில் போடுதல் போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இருமல் அல்லது தும்மலின்போது கைக்குட்டை பயன்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் அருகில் உள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவற்றை மேற்கொள்ள வேண்டும். புதிய வைரஸின் தாக்கத்தை தவிர்க்க வேண்டுமாயின் காய்ச்சல் மற்றும் மூக்கில் நீர்வடியும் நபர்களுடன் செயற்படுவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இதேபோன்று உணவு வகைகளை தயாரிக்கும் போது முட்டை, இறைச்சி போன்றவற்றை உரிய முறையில் சமைப்பது மிகவும் முக்கியமானதாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கால்நடைப் பண்ணைகளில் பணியாற்றும்போது பாதுகாப்பாக செயற்படுமாறு சுகாதார அமைச்சு அத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினருக்கு அறிவித்துள்ளது.

விசேடமாக இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவோர் கையுறை, முககவசம் போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று குறித்து சீனாவில் உள்ள இலங்கையர்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு பாதுகாப்பு நடவடிக்கைகளை கையாளுமாறும் அந்த அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## தற்காலிக...

படவுள்ளன.

30/1 தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அதன் பரிந்துரைகள் மற்றும் பிற செயன்முறை தொடர்பான முன்னேற்றத்தை மதிப்பிடுமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, மனித உரிமைகள் தொடர்பான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை அறிவுறுத்தியுள்ளது.

மேலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய 40/1 தீர்மானம் தொடர்பாகவும் எழுத்து மூலமான அறிக்கையை வழங்குமாறும் அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

அதன்படி, கடந்த வாரம் வெளியிடப்பட்ட மார்ச் அமர்வு தொடர்பான நிகழ்ச்சி நிரலில், உயர்ஸ்தானிகர் அலுவலகம் (A/HRC/ 43/19) இன் எழுத்து மூலமான அறிக் கையை சபை பரிசீலிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மத்திய செயற்...

மான சிறிகொத்தாவில் கூடவுள்ள மத்திய செயற்குழுவில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்படவுள்ளது.

கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு வாக்கெடுப்பின்றித் தீர்வினை வழங்குமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்றத்தின் பின்வரிசை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த கோரிக்கை தொடர்பாகவும் இன்றைய மத்திய குழுவில் ஆராயப்படவுள்ளது.

இதன்போது குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை மீண்டும் பிரதித் தலைவராக நியமிப்பதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான பதவிகள் தொடர்பான தெரிவுகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் முரண்பாடுகள் இன்றி தலைமைத்துவம் குறித்த பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதற்கான நடவடிக்கைகளை கட்சி முன்னெடுத்து வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அரசின் பக்கம்...

முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பு நேற்று கொழும்பு கண்காட்சி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

நாங்கள் ஒருபோதும் அரசாங்கத்தின் பக்கம் செல்லமாட்டோம். ஆனால் பொதுத் தேர்தலில் நாங்கள் வெற்றிபெற வேண்டும். அதற்காக அமைக்கும் கூட்டணியில் ஐக்கிய தேசியக் கட்சியே பிரதான கட்சியாக இருக்கப் போகின்றது.

அதனால் ஐக்கிய தேசிய கட்சிக்குள் இருக்கும் தலைமைத்துவப்பிரச்சினையை அவர்கள் விரைவாக தீர்த்துக் கொள்ளவேண்டும்.

அத்துடன் பல்வேறு பொய் வாக்குறுதிகளை தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது ஒன்றும் செய்ய முடியாமல் நிலை தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

சிங்கள மக்களை ஏமாற்றி பொய் வாக்குறுதிகளை வழங்கியே இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது. ஆனால் இவர்களின் சுயரூபம் வெளிவந்துள்ளது என்றார். (ம-3)

### யாழ்.நகர் பகுதிகளில்

# சைக்கிள் திருடிய இளைஞன் கைது

யாழ்ப்பாண நகரில் நீண்ட காலமாக துவிச்சக்கரவண்டிகளை திருடிச் சென்ற சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண நகர்ப்பகுதிகளில் தொடர்ச்சியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகள் திருடப்பட்டு வந்தன. பாதிக்கப்பட்ட பலர் இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

இதற்கமைய பொலிஸார் துவிச்சக்கர வண்டி திருடர்களை பிடிப்பதற்காக சில நாட்களாக கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று துவிச்சக்கரவண்டிகளை திருடும் நபர் என சந்தேகிக்கப்படும் நல்லூர் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2020/01/26
சீட்டிழுப்பு இலக்கம் 4100
D 3 5 5 5 9 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 26-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2373
X 09 41 43 49
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2020/01/26
சீட்டிழுப்பு இலக்கம் 0654
கன்னி 03 05 69 70

தன நிதானய
திகதி - 2020.01.26
சீட்டிழுப்பு இலக்கம் - 257
U 26 39 48 75

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1116
சீட்டிழுப்பு திகதி 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை
I 03 07 43 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.92,606,144

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 864
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.01.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,437,640/-
37 47 54 64 T

ராசி அதிர்ஷ்டம்
திகதி 26/01/2020 வெற்றி வாரம் 2750 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் துலாம் 19 24 29 47
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,719,798

551 மஞ்சள் 26.01 2020
A 25 44 45 51
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,274,565
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

## யாழ் ஆயர் இல்லத்தில்

# மக்கள் அபிவிருத்தி மேம்பாட்டுக்கான மன்றம் நேற்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டை முன்னெடுத்துச்செல்லும் நோக்கத்துடன் தமிழ் மக்கள் அபிவிருத்தி மேம்பாட்டுக்கான மன்றம் ஒன்றை அமைத்து செயற்படுவதற்கான அங்குரார்ப்பண கூட்டம் யாழ் மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய ஜஸ்ரின் பேணார்ட் ஞானப்பிரகாசம் அவர்களின் இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் வடக்கு கிழக்கில் உள்ள துறைசார் பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பொருளியலாளர்கள், புலமையாளர்கள், கல்வியாளர்கள், தொழில் சார் நிபுணர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் ஒருபுறம் நடைபெறும் அதேவேளை, யுத்தத்தினால் மிக மோசமாக பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகியவற்றை சமாந்தரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு சிவில் சமூகத்தின் காத்திரமான பங்களிப்பு அவசியம் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்ததன் பின்னணியிலேயே இந்த கூட்டம் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 10 வருடங்களுக்கு மேல் ஆகியுள்ள போதிலும் வடக்கு கிழக்கில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் தமிழ் மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை பிரதிபலிக்கும் வகையில் இன்னமும் மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படுகின்றது.

குறிப்பாக, இளையோர் வலுவூட்டல், வறுமை ஒழிப்பு, விவசாயம், மீன்பிடி, திறன் விருத்தி, பொருளாதார வலுவூட்டல், கல்வி, சுற்றாடல், நல்லாட்சி, சுகாதாரம், விஞ்ஞானமும் புதுமை படைத்தலும், தகவல் தொழில் நுட்பம், சட்ட உரிமைகள், தமிழர் மரபு, பல்துறை ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளில் துறைசார் வல்லுநர்களை அடையாளம் கண்டு வளங்களை சரியான முறையில் ஒன்றுதிரட்டி சரியான திசையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக துடிப்பும் செயற்திறனும் மிக்க சிவில் சமூக குழு ஒன்றின் தேவை இதற்கு அவசியமாக இருக்கின்றது.

இந்த அவசியத்தை கவனத்தில் எடுத்தே எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை ஆராயும்பொருட்டு நேற்றைய கூட்டம் நடைபெற்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அறிவு, ஆய்வு மற்றும் செயற்திட்டங்களின் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தின் ஊடாகவும் மற்றும் வெளிநாடுகளில் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் மற்றும் வளங்களை பயன்படுத்தி தமிழர்களின் செழிப்பு மற்றும் வலுவூட்டலுக்காக மன்றம் ஒன்றை ஸ்தாபித்து செயற்படுவது என்று இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய ஜஸ்ரின் பேணார்ட் ஞானப்பிரகாசம் மற்றும் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரின் தலைமையில் வடக்கு கிழக்கை சேர்ந்த 50க்கும் அதிகமான துறைசார் நிபுணர்கள், பேராசிரியர்கள் மற்றும் புல மையாளர்கள் இணைந்து செயற்படுவதற்கு முன்வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## ஒன்றிணைந்தால் அரசாங்கத்தை மாற்றியமைக்கலாம்

### ஹரின் பெர்னாண்டோ

(கொழும்பு)

ஒன்றிணைந்து செயற்பட்டால் அரசாங்கத்தை பொதுத்தேர்தலில் மாற்றியமைக்க முடியும். அதற்காக புதிய திட்டங்களுடன் முன்னோக்கிச் செல்லவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பு நேற்று கொழும்பு கண்காட்சி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது நாங்கள் எமது தவறுகளை திருத்திக்கொண்டு புதிய வடிவில் பொதுத் தேர்தலுக்கு முகம்கொடுக்க தயாராக வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் போன்று இறுதி நேரம்வரை பார்த்துக்கொண்ருக்க முடியாது. கட்சிக்கு தேவையானதை ஆதரவாளர்கள் கேட்கும்போது அதனை வழங்காவிட்டால், அப்போது ஆதரவாளர்கள் எவ்வாறான தீர்மானங்களை எடுக்கும் என்பதை நாங்கள் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

மேலும் அரசாங்கம் எமக்கு எதிராக மேற்கொண்ட பிரசாரத்தில் பிரதான இரண்டு விடயங்கள் தான் மத்திய வங்கி மோசடி. அடுத்தது ஏப்ரல் தாக்குதல். இந்த இரண்டில் ஒன்றுக்காவது இதுவரை அரசாங்கம் மக்களுக்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்கவில்லை.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து அரசாங்கம் குடும்ப ஆட்சியை மேற்கொண்டு செல்வதாகவும் அவர் கூறினார். (ம-3)

## தேர்தலுக்கு பின் அனைவருக்கும் சம்பளம் அதிகரிப்பு

### கோட்டா அரசு அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் அமைக்கப்படும் அரசாங்கத்தின் மூலம் அனைத்து சம்பள முரண்பாடுகளும் தீர்க்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் சம்பளம் அதிகரிக்கப்படாத அனைத்துப் பிரிவைச் சேர்ந்த ஊழியர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கம்பஹா பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். (ம-3)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-8795)

Maths Quiz & Olympiad
- கணித ஒலிம்பியாட் வகுப்புக்கள் (பிரிவு - I, II, III)
- கணித புதிர் பயிற்சி வகுப்புக்கள் (தரம் 6 முதல் 10 வரை)
- சிதம்பரா கணித போட்டிப் பயிற்சி வகுப்புக்கள் (தரம் 4 முதல் 9 வரை)

வகுப்புகள் தனி மற்றும் குழுவாக நடைபெறுகின்றன.
ஆசிரியர் - S.T.Subas
அறிவாலயம்
குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம்.
(பல்கலைக்கழகம் முன்பாக)
077 366 9620
(2106)


## 20 வருட விண்ணுலக வாழ்வு மனைவி மகளுடன்



சின்னக்குட்டி குண்டுமணி
பிறப்பு - 15.04.1933
இறப்பு - 27.01.2000



கமலம் குண்டுமணி
பிறப்பு - 04.06.1939
இறப்பு - 09.08.2012



புஸ்பராணி குண்டுமணி
பிறப்பு - 24.03.1959
இறப்பு - 04.01.2020

விண்ணுலகில் பன்னிரு ஆண்டுகள் தனித்திருந்து - உங்கள்
வாழ்வரசி அம்மாவை அழைத்தீர்கள் ஐயா - இன்று
இருபது வருட விண்ணுலக வாழ்வைக் கொண்டாட - உங்கள்
இனிய புதல்விதனையும் அழைத்ததேனோ ஐயா
ஆண்டுகள் பல கடந்தாலும் உங்களின்
ஈர நினைவுகள் என்றும் எம் மனங்களில் வாழ்ந்திடும் ஐயா

குடும்பத்தினர் - மகன்மார் : கலைதாசன் - 004179898088,
கலைமகள் வீதி, கமலமணி - 0041793603667
இமையாணன் கிழக்கு, மருமகன் : க.உதயசேகர், நிகன் வைத்தியநிலையம்
உடுப்பிட்டி. 0771329310, 0789135060
(C-9067)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(1998)

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/= கனடா - 950/=
ஜேர்மனி - 640/= நெதர்லாந்து - 690/=
இத்தாலி - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(C-9015)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-9052)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.